திருவள்ளுவர் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள்நாடு 1 அணா; வெளிநாடு 1½ அணா}

# குடி அரசு


உள்நாட்டு சந்தா ஆண்டு ஒன்றுக்கு ... ரூ 3—0
6 மாத சந்தா „ ... ரூ 1-12
வெளிநாட்டிற்கு „ ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு புரட்டாசி மீ 1 வ. (16—9—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 21.



இப்பொழுதுதான் வந்தது!! புதியசரக்குகள்!!

## உறுதியான கண்டி கறுப்புநூல் பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது:—

| | | |
|---|---|---|
| 2 இன்சு அகலம் | ரூ. 0—7—0 | ஓர் அடி |
| 3 „ „ | „ 0—10—6 | „ |
| 4 „ „ | „ 0—14—0 | „ |

1/4 இன்சு கனம் உள்ளது:—

| | | |
|---|---|---|
| 4 இன்சு அகலம் | ரூ. 1—2—6 | ஓர் அடி. |
| 5 „ „ | „ 1—7—6 | „ |
| 6 „ „ | „ 1—12—0 | „ |


## 26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள் அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும்:—

| | | | |
|---|---|---|---|
| 6 அடி நீளம் | 33 இன்சு அகலம் | ரூ. 2—4—0 | ஒரு தகடு. |
| 7 „ | „ | „ 2—8—0 | „ |
| 8 „ | „ | „ 3—0—0 | „ |
| 9 „ | „ | „ 3—6—0 | „ |
| 10 „ | „ | „ 3—12—0 | „ |

MASSEY & Co. LTD. ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.



நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாநகரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி, கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## "CATARACTSOL"


The best and safest Medicine, *For CATARACT in the eye.*

Scientifically prepared under medical supervision. Arrests the growth of the disease immediately & disolves the growth by long and continuous application.

Price one oz. bottle Rs 2—8—0, *(for one month's use)*

The above medicine can be had at, Dr. V. G. PANIKER'S Dispensary, ERODE. P. O. *(S. India.)*

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உயர்தி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்,

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மயிலாப்பூர். மதராஸ்.


## சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்

## 'திராவிடன்'

சினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,,18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணாக்கொடி தினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு கடகம், மயிர் மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

**S. K. மாணிக்கம் செட்டி,**
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்பேட்டை, சேலம்,

அன்பார்ந்த நண்பர்களே!

மனதிலுள்ள விஷயங்களை இங்கிலீஷில் வாக்கிய ரூபமாய் வெளிப்படுத்திப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சாதகமாய் உபயோகப்படக் கூடியது

"ட்ரான்ஸ்லேஷன் கைட்"

என்னும் புஸ்தகம் ஒன்றுதான். ஏனெனில், இங்கிலீஷ் இலக்கண விதிகளையும் மொழி பெயர்ப்பின் தத்துவங்களையும் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி உதாரணங்கள் சகிதம் யாவருக்கும் அனுபோகத்தில் பயன்படும்படிக்கான முறையில் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 10. வி. பி. சார்ஜ் அணா 4.

நீலகண்டம் புக் டிப்போ,
கயத்தார் P. O
(திருநெல்வேலி ஜில்லா.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

### விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0 நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

## "ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

# அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற புதுதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை போன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாவிபோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

# சுவாச காச ரோக நிவாரணி

## என்னும் ஆஸ்த்மா பௌடர் சிகிட்சை.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ மா. சோக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருந்தயிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ; 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் சைக்கிக் இன்ஸ்டிட்யூட், செளகார்பேட்டை, மதராஸ்


## கடவுளை வணங்க பார்ப்பனத் தரகர் வேண்டுமோ?

# நம் நாட்டில் பொது அறிவு பரவாமல் போய்விட்டதற்குக் காரணம், நமது மத ஆச்சாரிகளே.

( கைவல்ய சாமியார் எழுதுவது )

எங்களுடைய கற்பனையாலும் குதர்க்கத்தாலும் இஷ்டம்போல் இதை எழுதவில்லை. அறிவினால் நாமெல்லாம் ஒன்றுபட்டு, காலதேசவர்த்தமானங்களால் நேரிடும் பேதங்களெல்லாம் நீங்கிப்பெரும் பயன் எல்லோருக்குமுண்டாக வேண்டுமென்றே இதைஎழுதிவருகிறோம். அதுவும் நம் இந்துமதசாஸ்திரங்களிலுள்ள வேறுபாடுகளையெல்லாம்விட்டொழிக்க எந்த ஏடுகளை நாம் சாஸ்திரமென்றுபோற்றுகின்றோமோ அவைகளை ஆதாரமாகக்கொண்டேதான் எழுதிவருகிறோம்.

மனிதனிடம் அறிவுதான் ஒற்றுமைக்குமிகப்பெரியசாதனம். சென்னையில் ஒரு மூலையிலுள்ள மாணக்கனுக்கும், ஐரோப்பாவின் மூடக்கு ஒன்றிலுள்ள படிப்பாளிக்கும் உள்ள சம்மந்தம் அதிகம்; பெரிய சாஸ்திரிக்கும், இவருடைய பக்கத்து வீட்டில் அட்சரம் தெரியாமல் குடியிருப்போனுக்கும் உள்ள சம்மந்தம் குறைவு. நம் தேசத்தில் இந்த அறிவின் தீபங்கள் எத்தனை மங்கலாகவும் இடைவிட்டும் கொடுமையாகவும் எரிகின்றன என்பதை யோசிக்கும்போது உலகத்தார் அனைவரும் இக்காலத்தில் நாடிச் செல்லும "அறிவினால் ஒற்றுமைப்படுதல்" என்ற பாதை நமக் கெவ்வளவு கஷ்டமென்பது தெளிவாகும். அறிவின் முறையைச் சீர்திருத்தும் பொருட்டு இடையிடையே இந் நாட்டில் சில காரியங்கள் செய்யப்படுகின்றன. எனினும் அது பரவாமல் செய்யப்படும் தடைகள் எப்போதும் போல் வலியனதாகவே இருக்கின்றன. அதில் ஒரு தடையைப்பற்றி கீழே குறிப்பிடுகிறேன்.

காலையில் சூரியனைக் கும்பிட்டு உபாதானமெடுத்து, உலகத்தை ஏமாற்றிப்பிழைக்கவே சாஸ்திரங்கள்கற்பித்து அதைப் படித்துப்பிழைத்த சாஸ்திரிகளின் பிள்ளைகளெல்லாம் இப்பொழுது இங்கிலீஷ் ஓட்டல்களில் உண்ணாததெல்லாம் உண்டு, உடுக்காததெல்லாம்உடுத்தி,பண்ணப்படாததெல்லாம் பண்ணி"பறையனை"க்கும்பிட்டுப்பிழைத்துக்கொண்டுவரும் இக்காலத்திலேயே,இவர்கள் சிற்றப்பன்,பெரியப்பன்,மாமன்மைத்துனன்மார்களான பண்டிதர்கள் திருப்பதி சமஸ்கிருத காலேஜில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு வியாகரணம் (இலக்கணம்) சொல்லிக் கொடுக்கமாட்டார்களாம். இந்தக் கொடுமையான அசம்பாவிதம் நமது சென்னையைத் தவிர வேறெந்ததேசத்திலேனும் உண்டென்று நினைக்கிறீர்களா? அறிவுஎன்பது மனிதனுக்கெல்லாம் பொதுவென்பதை உலகமெல்லாம் ஒப்புகொள்ளுகிறது. நமது மாகாணத்தில் மட்டும் அக் கொள்கை செல்லுபடி ஆவதில்லை. இதற்கெல்லாம் காரணம் மத மென்றும், சாஸ்திரமென்றும்,அதன் ஆச்சாரிகளின் உபதேசங்களென்றும், இத்தனைக்கும் கர்த்தாவான நம் கடவுள்களின் நியமனமென்றும் சொல்லுகிறார்கள். "எல்லா தேசத்துக் கடவுளும்,அறிவாளிகளும் ஒத்துக்கொள்ளாததை நாம் கடவுள் நியமனமென்று சொல்லலாமா" வென்று சொல்லிவிட்டால் அப்பொழுதே அவன் நாஸ்திகனாய்விட்டான்.! "மற்றெல்லாமதங்களும் பொது அறிவைத் தடுக்கவில்லையே" என்று கேட்டாலே போதும். உடனே அவன் மதத் துவேஷியாகிவிடுகிறான்! "மற்ற மத ஆச்சாரிகள் பொது அறிவில் குறுக்கிடுவதில்லையே" என்றாலே போதும். அவன் ஆசாரிகளைத் தூஷிக்கிறவனாகிவிடுவான். "நம் சாஸ்திரங்கள் ஒன்றோடொன்று சண்டை போடுகிறதே; ஒன்றுக் கொன்று விரோதமாகவும் முரணாகவும் இருக்கிறதே" என்றாலே போதும். "சாஸ்திரம் படிக்காதவன்! சாஸ்திர விஸ்வாசமில்லாதவன்! ஆராய்ச்சியில்லாதவன்!" ஆகிவிடுகிறான்.

"புத்தியைப் பிரமிக்கச் செய்யததற்க பற்பல விதமான வியாக்யானங்கள் செய்யும் சாமர்த்தியம் புலவர்களின் பெருமைக்கும், இன்பத்திற்குமேயன்றி ஆத்மாவின் முக்திக்குப் பயன்படாது" என்பதுபோல,மதாச்சாரிகள் எழுதியிருக்கும் புஸ்தகங்களும், வியாக்யானங்களும் மதத் துவேஷம் நிறைந்தும், வேறுபாடு மிகுந்தும், தங்கள் கொள்கைகளையே நிலை நிறுத்த மூன்னுக்குப்பின் வரும் விக்கியாசங்களைக் கருதாமலும் எழுதப்பட்டிருப்பதினால் மதாச்சாரிகளின்பெருமைக்கும், ஆடம்பரத்திற்கும்,அவர்களது போக போக்கியத்திற்கும் அவர்களின் சிஷ்யர்கள் வயிற்றுப்பிழைப்பிற்கும் பிரயோஜனப் பட்டதேயல்லாமல் சனசமூகங்களுக்கு மதத்தின் உண்மைகள் தெரியாமலும், மதத் துவேஷம் மேலிட்டு பொது அறிவின் தன்மைகளை உணரமுடியாமலும் செய்து விட்டன

நம் தெய்வங்கள் என்று சொல்லப்படுபவைகளில் சிவனும், விஷ்ணுவும் பெரிய தெய்வங்கள்; இவர்கள் அதர்மத்தை அழித்து தர்மத்தை உலகத்தில் உண்டாக்க அவதரித்தார்களென்று நாம் பெரிய கிரந்தமென்று கொண்டாடப்பட்டவைகளிலெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. "மனிதனது நித்தியமான ஆத்மஸ்ருபமே நம் மதத்திற்குப் பிரமாணம் என்றும், அது வற்புறுத்தும் நல்லொழுக்கத்திற்கு மனிதனது அத்யாத்ம நித்ய சின்மயத் தன்மையே ஆதாரம் என்றும், இதுதான் நம் மதத்தின் உத்தம நிலையான ஞான தத்துவம் என்றும், ஆனால் சாதாரணமாயுள்ள சனங்கள் பெரும்பான்மையோருக்கு இது கஷ்ட சாத்தியமானபடியால் அவர்கள் சுலபமாய் தெரிந்துகொண்டு பின்பற்றக் கூடிய ஒரு மகா புருஷனது அனுஷ்டானமும் திவ்விய சரித்திரமும் அவசியம்" என்றும் சொல்லப்படும் ஞாய சமாதானங்கள் எங்களுக்கும் தெரியும். உலகத்திலுள்ள நல்லொழுக்கம, தர்மம், ஞானம், பக்தி என்கிற இவை எல்லாம் அவரவர்கள் நினைக்கும் மகா புருஷனிடமே இருந்து வரவேண்டுமென்பதற்குக் கூட நம் மூர்த்திகளில் யாரையேனும் மதக் கிரந்தங்களில் அவர்களின் நடத்தை ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறதா? இல்லை. அவைகளில் சில மகாமேதாவிகளான ஆசாரிய புருஷர்கள் எழுதினவைகளே ஆபாசமாக இருக்கிறதென்பதைக் காட்ட சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

வேத சுருதிகளையும் உபநிஷத்துக்களையும் திரட்டி எழுதப்பட்டதே பிர்மசூத்திரம். இதைச்செய்தவர் வேதவியாசர். இதற்கு அநேகர்கள் அர்த்தமெழுதி யிருக்கிறார்கள். ஒருவர் அர்த்தத்தைப்போன்று மற்றொருவர் அர்த்தமிருக்காது. ஒவ்வொரு அர்த்தமும் ஒவ்வொரு மதப்பிரிவின் சித்தாந்தம். ஆனால் பிர்ம சூத்திரமென்பது ஒரே ஏடுதான். இந்துமதப் பிரிவின் ஒரு பகுதிக்கு ஆச்சாரியான மத்வாச்சாரியார் செய்திருக்கும் பிர்ம சூத்திர பாஷியத்தின் முகவுரையில் அடியில் காணும் விஷயம் சொல்லப்படிருப்பதாக நாம் இப்பொழுது படிக்கிறோம், மத்வாச்சாரி யென்பவர் 'விஷ்ணுவின் அம்சம்' வாயுபகவானே அவராகி அனுமானாகவேவிளங்குகிறவர்.

"உண்மையான மதத்தைப் பின்பற்றி உலகத்தில் எல்லோரும் மோட்சத்தை அடையத் தகுந்தவர்களானார்கள். அதைக் கண்டு கவலை கொண்டு மகாவிஷ்ணு சங்கரனைப்பார்த்து 'மகா புருஷனே! ருத்திர மூர்த்தியே! இந்தக் கெடுதியைத் தடுக்கவேண்டும். ஜனங்களின் புத்தியைக் கவர்ந்து மயக்கி மோகிக்கச் செய்து மோட்சத்தை அடையும் மார்க்கத்திலிருந்து அவர்களைத் திருப்பும்படியான சாஸ்திரங்களைச் செய்ய லோகத்தில் அவதாரம் செய்து அவைகளை எல்லோருக்கும் உபதேசம் செய்'யென்றார். அப்படியே சங்கரன் சங்கராச்சாரியாக அவதரித்து அத்வைத மதத்தை உபதேசித்து அதைக் கைக்கொண்டவர்களை நரகத்திற்கு அனுப்பினார்" என்று சொல்லப்படுகிறது.

ஆச்சாரி மடங்களில் நடக்கும் உருட்டுப் புரட்டெல்லாம் கூடி உண்மையாக நடக்கும் விஷயத்திலுள்ள ஒன்றையும் கீழே சொல்லுகிறேன். நமது தென்னாட்டிலுள்ள துவைத மத மடமொன்றில் ஒரு ஆச்சாரி இருந்தார். அவர் தம் மதத்தை நிலைநிறுத்துவதிலும், புறமதங்களைக் கண்டிப்பதிலும் மகா நிபுணர். இவரை ஜெயித்து அத்வைத மதத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தால் மிகுந்த லாபமுண்டென்று அக் காலத்திலுள்ள அத்வைத பண்டிதர்கள் நினைத்து அவர் பூசை செய்துகொண்டிருக்கும் சமயம் எல்லாரும் உள்ளே நுழைந்து பூசை செய்யும் ஆச்சாரியாரைப் பார்த்து "இப்பொழுது சத்தியமாகச் சொல்லும், அத்வைதம் உண்மையா த்வைதம் உண்மையா" வென்றார்கள். ஆசாரியார் கொஞ்சமேனும் தயங்காமல் கைகளைத் தூக்கிக்கொண்டு "நான் பூசை செய்யும் இந்தத் தெய்வத்தின் மேல் ஆணை வைத்துச் சொல்லுகிறேன்; அத்வைதமே சத்தியம் த்வைதமே அசத்தியம்" என்று பிரமாணம் செய்துவிட்டார். பார்த்தார்கள் சிஷியர்கள், குருவைக் கோபித்துத் திட்டி மடத்தைவிட்டு ஓடிப்போகச் சொன்னார்கள். குரு அந்தச்சிஷியர்களைப்பார்த்து "மடையர்களே, உங்களுக்கு வயிறுவெடிக்கத் தின்பதும்,முரட்டுத்தனமாகப் பேசுவதும்தான் தெரியும். நீதி, யுக்தி, உபாயம் முதலிய யாதொன்றும் தெரியாது. நான் சொல்லுவதைக் கேளுங்கள். "நமது மதத்தில் ஜீவகோடிகள் மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது, எப்பொழுதும் முக்தியையே அனுபவிக்கிறவர்களான முக்தி யோக்யர்கள்; எப்பொழுதும் நரகத்தையே அனுபவிக்கவேண்டிய தமோயோக்யர்கள்; எப்பொழுதும் இந்த ஸம்சாரக்கடலிலேயே நீர்க்குமிழி அடித்துக் கொண்டிருக்க வேண்டியவர்களான நித்ய ஸம்ஸாரிகள் என்று மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். நமதுமதத்தைத்தவிர மற்றமதங்களைப் பின்பற்றுகிறவர்களெல்லோரும் தமோயோக்யர்களே. நமது மதத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் முக்தி யோக்யர்கள், "அத்வைத மதத்தில் பிறந்து நித்யநரகங்களை அடைய வேண்டிய மகாபாவிகளை நாம் முக்தி யோக்யர்களாகச் செய்யத்தகுமா? அது ஈஸ்வரனுடைய நியமனத்திற்கு விரோதமல்லவா? நான் அவர்களுடன் வாதம் செய்து த்வைதமே சத்திய மென்று சித்தாந்தம் செய்து விட்டால் அவர்கள் தங்களுடைய மதத்தைவிட்டு நமது மதத்திலல்லவாசேர்ந்துவிடுவார்கள், அப்பொழுது முக்திக்கல்லவா யோக்யராய் விடுவார்கள். அந்தப்பாவத்தை நான்செய்யலாமா? நம் மதத்தைக் காப்பாற்றவும், மத விரோதிகளைக் கொடுமையாகத் தண்டிக்கவும் நான்செய்த பொய்ச் சத்தியம் பாவமல்ல; பாவமாகவிருந்தால் பெருமான் காரியமானதால்மன்னித்து விடுவார்" என்று சொன்னார்.

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இனாமாய் விடப்பட்ட கோவில் சொத்துக்களையும் மடத்து சொத்துக்களையும் என்ன செய்வது?

## மேல் நாட்டில் என்ன செய்தார்கள்?

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

திரு ஞானநந்தசுவாமிகள்மொழிபெயர்த்தது.

“குருமார்களுக்கு விட்ட மடங்களும், விடுதிகளும், பின்னர், தீயவொழுக்கம் படைத்தனவாய் ஆயினவாலும், அவை ஆதியில் மதத்தையும் நாகரீகத்தையும் பரப்புவதில் பெரும் ஊழியம் செய்திருந்தன. ஆனால் அவை காலத்தை யொட்டித் திருத்திக்கொள்ளவில்லை. 1400-ம் ஆண்டுக்கும் 1500-ம் ஆண்டுக்கும் இடையில் பொதுநல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருந்தன. ஆயினும், கல்லூரிகளும் பாடசாலைகளும் மட்டும் புதுவழக்கமாக ஏற்பட்டன. சிலசமயம், உல்ஸியின் செய்கை ருசுப்பித்ததுபோல, மடங்களையும் விடுதிகளையும் தொலைத்துவிட்டு, அவற்றுக்குப்பதிலாக அவற்றின் பணத்தைக்கொண்டு புதிய கல்லூரிகள் நிறுவுவது நலமென்று தோன்றியது”

பண்டைய கோவில் பத்தியால், கோவில்கள் பெருமைப்பட்டிருந்த நிலைமையானது காண்பதற்கே அபூர்வமாய் போயிற்று.........மனிதர்கள், தர்மவிடுதிபெற்றிருந்த கோவில்கார ஆசாமிகளையெல்லாம், லக்ஷியம் செய்வதும் ஒழிந்தது. எவரும் கோவில் சம்பந்தவேலையில் சிரத்தை காட்டுவதும் ஒழிந்தது. கோவில்காரரது நடவடிக்கைகள் பொதுஜனங்களின் மனதில் ஐயத்தைக்கிளப்பி விடுவனவாயும், அவர்களது பெருத்த செல்வமானது அரசர், மந்திரிமார் ஆகியவர்களது மனத்தைக்கவர்ந்துகொண்டும் இருந்தன”

“1535-ம் ஆண்டில் கிராம்வெல்லென்ற அதிகாரி நாடெங்கும் கமிஷனர்களை அனுப்பி, மடங்கள் இனும், விடுதிகள்-இவற்றின் நிலைமையை ஆராய்ந்து விசாரிக்குமாறு நியமித்தார்.........விசாரித்தவர்கள் ஷை மடக்காரர்களும், விடுதிக்காரர்களும் அயோக்கியபத்தனமாயும், துர்நடத்தையோடும் இருந்தனர் என்று ரிபோர்ட்டுசெய்ய நேர்ந்தது. 1536-ம் ஆண்டில் பார்லியமெண்டானது 200 பவுன்வருஷவருமானத்திற்குள்பட்ட ஷை எல்லா விடுதிகளையும் ஸ்தாபனங்களையும் ஒழித்துவிடச் சட்டம்செய்தது. அவற்றின் சொத்துக்களை அரசன் பற்றிக்கொண்டான். இவ்வண்ணமாக ஏராளமான மததர்ம விடுதிகளையும், அவற்றில் வாசம் செய்பவர்களையும் கலைத்துவிடவே,- ஆலயங்களும் குலைத்துவிடப்படவே,- அவற்றின் சொத்துக்களெல்லாம் பறிமுதல் செய்யப்படவே- அப்பொழுதுதான் சாதாரணமான மனிதர்கள், நாட்டில் பழைய மதமானது ஒழிய ஏற்பாடுகள் ஆகியுள்ளனவென்று கண்டுகொண்டார்கள்”

வடஜில்லாக்களது ஜனங்கள் ஷை செயல்களை வெறுத்தவர்களாய் போர்இடக்கிளம்பிவிட்டார்கள். கலகங்கள்.........நிகழ்ந்தன............... அரசனால் அனுப்பப்பட்ட நார்போக் என்பவர் போரிடக்கிளம்பிவந்த ஜனங்களைச் சமாதான வார்த்தைகள் கூறித் திரும்பிச் செல்லவைத்தார். மறுவருஷமும் கலகங்கள் நடந்தன; நடந்தகாலையில் அரசன் கலகக்காரரின் தலைவர்களை விரட்டியடித்தும் தண்டித்தும் கொலை செய்தும் அச்சுறுத்தினான். பின்னரும் அப்படிப்பட்ட கலகங்கள் நிகழாமல் வடக்கு மந்திராலோசனைச்சபை (Council of the north) ஒன்று நியமித்தான். அதனால் தென் ஜில்லாக்களைப் போலவே வடஜில்லாக்களும் அமைதியாய்ப் பணிந்துவிட நேர்ந்தது. 1536-ல் பெரிய அந்தஸ்துள்ள விடுதிகளும் மடங்களும்கூட சம்முடிவுக்குவந்துவிட்டன. வாய்ச்சொல்லுக்குஉட்பட்டுச்சொத்துக்களை மன்னனிடம் ஒப்பித்துவிடாத ஆலயக்காரசாமியார்களையெல்லாம் பயமுறுத்தலுக்கும் பலவந்தக் கட்டுக்கும் உட்படுத்தினான். அதிலும், அவர்கள்மேல் மன்னன் புகார்செய்து பார்த்து அடக்கிவிட்டான். தூக்குத் தண்டனைகளும் விதித்தான். இவ்விதமாகப் பறிமுதல் செய்யப்பட்ட......பொருளில் பெரும்பாகம் பொதுஜன க்ஷேமத்திற்கானகாரியங்களுக்குச் செலவிடப்பட்டது. உதாரணமாக யுத்தக்கப்பல்கள் கட்டுவதிலும் கடற்கரையில் கோட்டைகொத்தளங்கள் நிறுவுவதிலும்கூட செலவிடப்பட்டது.

வேறுமாறுதல்களும் நேர்ந்தன. பெரிய விடுதிகளும் மடங்களும் உடைபட்டுப்போனவுடன் விக்கிரகங்களும் தொழுகைக் குறிகளும் உடைத்தெறியப்பட்டன. மதவிழாநாட்களும் ஓய்ந்தன. ஆங்கில ஞானிமார்களது கோவில்களும் தகர்த்தெறியப்பட்டன. பல பூரண சீர்திருத்தங்களைத் தேடியவர்கள், ஹென்றி மன்னன் ஆறு திருத்தங்களுடன் நின்றுவிட்டதைக் கண்டு ஏங்கிப்போய்விட்டனர்”

“எட்டாவது ஹென்றி இறந்தவுடன் (1549) சீர்திருத்தக்காரர்களுக்கு நல்லதருணம் வாய்த்திட்டது, அவர்கள் தங்கள் பூராக்கொள்கைகளும் நடைமுறையில்வரவேண்டுமென எண்ணங்கொண்டனர், அவர்கள் ஹென்றியின் முட்டுக்கட்டை பெண்ணங்களைக் கைகூடாமற்செய்தனர். அவர்கள் தம்தலைவரான டியூக் அப் ஸோமர்ஸெட் (Duke of somerset) என்பவரை ராஜாங்கரக்ஷகராக வைத்துக்கொண்டனர். அவர்கள் தம் சபையில்தாமே பூராவாக ஆதிக்கம்கொண்டிருக்கும்படி செய்துகொண்டனர். உள்நாட்டு விவகாரத்தில் கோவில்கள் விஷயத்தில் பூராவாக செம்மைப்படுத்துவதற்கு ஸோமர்செட் கவலை செலுத்தினார். அவருடைய முக்கியஉதவியமைச்சரான கிரான்மார் என்பவர் ஹென்றிமன்னன் அனுசரித்த நடுவழியை விட்டுவிட்டு ஜர்மன் லூதர் கக்ஷியினது சிஷ்யர்களில் ஒருவரானார். ஆலய ராஜாங்கமேற் பார்வைக்காரர்கள் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டு நாடெங்குமுள்ள ஆலயங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் மகான்களது விக்கிரகங்களையும், கல்பலி பீடங்களையும், பண்டைய பழக்கங்களைக் காட்டக்கூடியஎல்லா அடையாளங்களையும், ஆகாரங்களையும் நொறுக்கி எறியும்படி உத்தரவு தரப்பட்டிருந்தனர். இவர்களது செய்கைகளைஎதிர்த்த பழைய குருமார் தம்பதவிகளினின்றும் அப்புறப்படுத்தப்பட்டனர்......அதிகப்படி மாறுதலும் செய்தனர், அதன்படி குருமார் கலியாணம்செய்துகொள்ளலாம்; ஆலயச் சொத்துக்கள், மேலும் பறிமுதல்செய்யப்பட உத்தரவு ஏற்பட்டது. எட்டாவது ஹென்றி எடுத்து விட்டில்லாத ஏனைய மதஸ்தாபனங்களும் இறந்தவர்க்கென உள்ளசெபம்செய்யும் கட்டிடங்களும் ஒழிக்கப்பட்டன. இந்தஸ்தாபனங்களையொட்டியிருந்த வைத்திய சாலைகளும் பாடசாலைகளும் மட்டும் விடப்பட்டன”

“ஆலயங்களில் ஜபகாரியத்திற்காக வாசிக்கப்படும்வசனங்கள்லத்தீன்பாஷையில்இருக்கக்கூடாதென்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. கொஞ்சகாலத்திற்குப்பின் (1549) ஸோமர்ஸெட் தம்சபையினரால் சபைத்தலைமைஸ்தானம் தரப்படவில்லை......சபையினர் ஸோமர்செட் என்பவரால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் மிகச்சொற்பம் என்றே எண்ணினர்.

இச் சமயத்தில் லூதர் என்பவரும் பிரான்ஸிஸ்..........என்பவரும் ஐரோப்பாவில் இறந்துபோய்விட்டனர். உடனே ஜர்மனியில் கிளம்பியிருந்த சீர்திருத்த நடவடிக்கைகளையெல்லாம் தொலைக்க, மத்திய ஐரோப்பாவிலுள்ள மன்னனான ஐந்தாம் சார்லஸ் என்பவர் பெரு முயற்சிகைக்கொண்டார்; அவரது காரியம் வெற்றிதரும் போலவும் தோன்றிற்று. அத் தருணத்தில் அவரது நாட்டின் சீர்திருத்தக்காரர் இங்கிலாந்து நாட்டுக்கு ஓடிவந்துவிட்டனர். மார்ட்டின் பூசர் என்ற ஜர்மனியரும், பீட்டர் மார்ட்டிர் என்ற இட்டலியரும் அவர்களது வகுப்பாருக்குள் தலைமையானவர்கள். அவர்கள் ஆக்ஸ்போர்டு கல்லூரியில் போதகாசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டனர். அவர்களுக்கு இங்கிலாந்தில் பெரும் சிஷ்ய கூட்டங்கள் வாய்த்தனர்”

“கிரான்மார் என்பவர், லூதருக்கும் மேற்கொண்டு போதித்தவரான ஸ்விட்சர்லாண்டின் ஸ்விங்கில் என்பவரைத் தம் வழிகாட்டியாய்க் கொண்டு, அவரது பெரும் புரட்சிக் கொள்கைகளை அனுசரித்தனர். இந்த ஸ்விங்கில் என்பவர், கிறிஸ்து பிரசாதம் என்பது கிறிஸ்து நேரில் வீற்றிருந்து கொடுக்கப்படுவதல்ல என்று கூறினர். அவருடைய உதவியாளரான புலமைவாய்ந்த நிக்கோலஸ்ரிட்லி என்பவர், ஸ்விங்கிலின் கொள்கையில் தளராதவர். அவர் லண்டனுக்கு ஆலய குருவாக நியமனம் செய்யப்பட்டிருந்தார். அவர் மேற்குறிப்பிட்டுள்ள செப புத்தகத்தையே எதிர்த்தார். ஆகலால் அவர், பின்னர், சிறையிடப்பட்டார். இன்னொரு புதுமத குருவான ஜான்ஹூப்பர் என்பவர் நெடுநாளாகத் தம் பழைய மத ஆசார அறிகுறியான உடைகளைத் தரிக்க இணங்க மறுத்துவிட்டார். அவ்வுடைகளை அவர், பெரிய மத ஆச்சாரிக் கர்வம் யென்று கருத்துக் கொண்டார். இவரைப்போன்ற எல்லாரும், ஸோமர்செட்டுக்குப் பின் வந்த வார்விக் ஆனவர் நூதன மாறுதல்களை ஆலய விஷயங்கள் சம்மந்தமாக உண்டு செய்வார் என்று எண்ணி, எதிர்பார்த்தார்கள். அவ்வண்ணமே வார்விக் என்பவரும் சந்தோஷமாக அவர்களது இஷ்டங்களைப் பூர்த்தி செய்தார்...............”

“குருமார்களது ஸ்தானங்களெல்லாம் மேலும் மேலும் ஒழிக்கப்பட்டுவந்தன. ஏதேனும் விட்டுவிடப்பட்டிருக்குமாயின் அவற்றின் வருமானங்களெல்லாம் குறைத்துவிடப்பட்டன. சாதாரண மனிதர்கள் குருஸ்தானங்களில் நியமனம் செய்யப்பட்டனர். சீர்திருத்தங்கள் பரிபூரணமாக உண்டுசெய்யப்படலாயின. 1549-ம் ஆண்டின் செப புத்தகமும் பழமையானதெனக் கருதப்பட்டு மாற்றப்பட்டது. 1552-ம் ஆண்டில் இரண்டாம் செப புத்தகம் உபயோகப்படுத்தப்படும்படி திட்டம் செய்யப்பட்டது. ஸ்விங்கிலின் உபதேசங்களும் பின்பற்றப்படலாயின. இதனால் கிறிஸ்து பிரசாதம் என்பதும், கிறிஸ்துவின் சாக்ஷாத்காரம் என்னும் கொள்கையும் மறுக்கப்பட்டன.

ஆனால் இதுவரையில் பழைய செப நூலில் அது ஒப்புக்கொள்ளப்பட்டே இருந்தது. கிரான்மார் என்பவர் தம் பழைய மன வெழுச்சியில் குன்றுமலே இருந்தார். 1552-ல் வரைந்த செப நூல் (தொழுகைக்கு உபயோகமாகவுள்ள நூல்) இன்றைக்குள்ள நூலுக்கே கிட்டத் தட்ட ஒத்து இருந்தது.

மேலும், சீர்நெறிகள் வகுக்கப்பட்டன. அவற்றுள் மிகவும் முக்கிய அம்சமென்னவென்றால், 1553-ம் ஆண்டின் 42 விஷயங்கள் என்னப்பட்ட சீர்திருத்தக் கொள்கைகளாகும். அவை லூதர் உபதேச மார்க்கத்தை ஒத்திருந்தன. அவை, இங்கிலீஷ் ஆலயங்களுக்கு என ஐரோப்பாவில் பரவிய கொள்கைகளைப் பூராவாக அங்கீகரித்துப் பூராவாக ஒப்புக்கொள்ளப்பட்டன. சீர்திருத்த அம்சக் குறிப்புகள் முதலில் 42 ஆக இருந்ததை மாற்றி 39 ஆக வைத்துக்கொண்டனர்.

# சென்னையில் மாபெருங்கூட்டம்.

## "தற்கால ராஜீய நிலைமை"

(தலைவர்கள் சொற்பெருக்கு.)

செப்டம்பர்-மீ 6-தேதி மாலை 6-மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் பார்ப்பனரல்லாதார் பொதுக் கூட்டமொன்று திவான்பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியார் தலைமையின் கீழ் நடந்தது. அவ்வமையம் திவான் பகதூர் டி. வரதராஜுலு நாயுடு, ராவ்பகதூர் முனுசாமி நாயுடு, ஸ்ரீ. வி. சர்க்கரை செட்டியார், முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீ. டி. என். நடராஜ பிள்ளை, ஈரோடு ஸ்ரீ. ஈ. வெ. ராமசாமி நாயக்கர், திராவிடன் ஆசிரியர் ஸ்ரீ. ஜே. எஸ். கண்ணப்பர், ஸ்ரீ. கே. வி. மேனன் முதலியோர்கள் வந்திருந்தனர்.

ஸ்ரீ கே. வி. மேனன் அவர்கள் ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்களை பேசும்படி கேட்டுக் கொண்டார்.

### திரு. நாயக்கர்.

சகோதரர்களே!

இன்று நான், இன்ன விஷயத்தைப்பற்றித்தான் பேசவேண்டுமென்று நான் முடிவு செய்யவில்லை. ஆகிலும் கமிஷன் பகிஷ்காரம் என்னும்பொருள்பற்றிச் சிறிது பேச விரும்புகிறேன். ஏனெனில் அதுதான் இப்போது அரசியல் உலகத்தில் முக்கியமாக அடிபடுகிறது. அதாவது நமக்கு இதற்குமுன் சர்க்காரால் அளிக்கப்பட்டு நாம் அனுபவித்துவருகிற சீர்திருத்தத்தைக் குறித்தும், இந்தியர்களுக்கு இன்னும் அதிகப்படியான சீர்திருத்தம் கொடுக்கலாமா, அவர்கள் அவற்றை அடைய லாயக்குத்தானா என்பவைகளைக்குறித்தும் விசாரித்து அறிவிக்கும்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டு இப்போது ஒரு கமிஷனை அனுப்பியிருக்கிறது என்பதைப்பொருத்தவரை அரசியல் வாதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். எனவே, நாம் இதை இப்போது பகிஷ்கரிக்கவேண்டுமா அல்லது அதனிடம் நமது குறைகளைச் சொல்லவேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்யவேண்டும், ஒத்துழைப்பதால் நாட்டுக்கு நன்மையுண்டா, அல்லது பகிஷ்கரித்தால் நன்மையுண்டா என்பதை முதலில் கவனிக்கவேண்டும். நான் ஆரம்பத்திலிருந்தே ஒரு சிலர் ஆரம்பித்திருக்கும் கமிஷன் பகிஷ்காரம் வெறும் புரட்டென்றும், ஏதோ சில பார்ப்பனர்கள் கமிஷனால் தங்களுடைய ஆதிக்கம் போய்விடுமோ என்னும் பயத்தால் பகிஷ்காரம் பகிஷ்காரம் என்று வெறும் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்களென்றும் அவர்கள் மற்றவர்களை ஏமாற்றி தாங்கள் காரியம் கொண்டுபோகவே இவ்வியக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்களென்றும் ஆகையால் இழிவையும் கொடுமையையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாதார் இத்தகைய ஏமாற்று வார்த்தைகளுக்கு ஆளாகாமல் கமிஷனிடம் தங்களுடைய கஷ்ட நஷ்டங்களை தெரிவித்தால்தான் அவர்களுக்கு ஏதாவது நன்மை உண்டாகலாமென்றும் நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். சைமன் கமிஷன் பிரச்சினையின் ஆரம்பத்தில் ஜஸ்டிஸ் கட்சியும்கூட முதலில் இடறிவிட்டது. அது நமக்கும்கமிஷனுக்குமென்னென்ன சம்மந்தங்களிருக்கின்றன, நமக்கு அதனால் நன்மை ஏதாவது கிடைக்குமாவென்றெல்லாம் கவனிக்காமல் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துவிட்டது. ஏனெனில் அவர்கள் அடுத்த தேர்தல் எப்படி எப்படி வந்து முடியுமோவென்று பயந்துவிட்டார்கள். நம் ஓட்டர்களுக்கோ ஓட்டை எப்படி உபயோகிப்பது என்கிற அறிவு இன்னும் வரவில்லை. அவர்களை ஏமாற்றி வயிறு வளர்க்க ஒரு சாரார் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அக்கூட்டத்தில் ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கவேண்டிய கூலிகளெல்லாம் சேர்ந்து கொண்டார்கள். ஆனால் சமூக சீர்திருத்தத்துக்காகப் பாடுபடுகிறவர்களும், உத்தியோகத்தை விரும்பாதவர்களும், சுயமரியாதை யுள்ளவர்களும், பகிஷ்காரம் புரட்டு, அதில் ஒன்றுமேயில்லை, பகிஷ்காரம் என்று கூச்சல் போடுகிறவர்களின் யோக்கியதை நமக்குத் தெரியும் எனச்சொல்லி மக்களை எச்சரிக்கை செய்து கொண்டு வந்தார்கள். சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் பகிஷ்காரம் புரட்டு என்று கூறிவந்தார்கள், நானும் எனது பத்திரிகையில் அவ்வாறே எழுதிவந்தேன். நமது மதத்திலுள்ள ஊழல்களையும், புரட்டுகளையும் எடுத்துக்காட்டினால் நம்மை நாஸ்திக மதத்தைப் பரப்புகிறவர்களென்று சொல்வதுபோல் அரசியல் புரட்டுகளை எடுத்துக்காட்டினால் தேசத் துரோகிகள், சர்க்கார் பூசாரிகள், உத்தியோக வேட்டைக்காரர்கள் என்றெல்லாம் நம்மை ஒரு சாரார் தூற்றிவந்தார்கள். அந்தக் காலத்தில் நாம் எக்காரணத்தைக்கொண்டு கமிஷன் பகிஷ்காரம் புரட்டென்றும், அதனிடம் நமது குறைகளைச் சொல்லிப் பார்த்து விடவேண்டுமென்றும் கூறிவந்தோமோ அந்தக் காரணங்களைக் கொண்டே முன்பு பகிஷ்காரத்தில் சேர்ந்திருந்தவர்கள் இப்போது வந்துவிட்டார்கள். முன்பு பகிஷ்கரிப்பதென முடிவு செய்த ஜஸ்டிஸ் கட்சியும் கமிஷனுடன் ஒத்துழைக்க முடிவு செய்துவிட்டது. ஏனெனில் அவர்கள் கமிஷனுடன் ஒத்துழைப்பதற்குத் தடையாயிருந்த நிபந்தனைகள் நீக்கப்பட்டுவிட்டன. சென்னையில் ஒரு கூட்டத்தார் கமிஷனை பகிஷ்கரிக்கவேண்டுமென்று கூச்சலிட்டதுமன்றி சைமன் இந்தியாவுக்கு வந்திறங்கிய தினத்தில் ஹர்த்தாலும் நடத்தினார்களே, அது என்னவாயிற்று. இரண்டொருவர் ஹைகோர்ட்டு முன்பு சுட்டுக் கொல்லப்பட்டதோடு அது நின்றது. அவர்களில் சிலர் இப்போது சட்ட சபை கமிட்டித் தேர்தலுக்கும் அபேட்சகர்களாக நிற்கிறார்கள். அவர்கள் அடுத்த தேர்தலை எண்ணியே பகிஷ்காரத்தில் சேர்ந்தார்கள். ஒரு மாகாணத்திலும் பகிஷ்காரம் பலிக்கவில்லை. அவர்கள் கூறும் பகிஷ்காரத்துக்கு நம்முடைய குறைகளை சர்க்காரிடமும், கமிஷனிடமும், பார்லிமெண்டாரிடமாவது சொல்லிக்கொள்ளக் கூடாதென்பது தான் அர்த்தமா? பகிஷ்காரமென்று கூச்சல் போடுகிறவர்களுக்கு உள்ளுக்குள் ஒத்துழைக்கவேண்டுமென்பதுதான் எண்ணம். ஆனால் மக்களை ஏமாற்றி வாழ்வதற்கே அவ்வாறு சொல்லிக்கொண்டார்கள் அவர்களுடைய நடவடிக்கைகளை நன்கு கவனித்தால் அவர்களுடைய யோக்கியதை இன்னதென்பது நமக்குத் தெரியவரும். பகிஷ்காரம் வெறுங் கூச்சலாக இல்லாவிட்டால் ஒவ்வொருவரும் தனித்தனியாக சுயராஜ்யத் திட்டம் தயாரித்து அனுப்புவானேன்?

### ரகசிய திட்டங்கள்.

ஸ்ரீ. எஸ். சீனிவாசய்யங்கார் தயாரித்த திட்டம் பார்லிமெண்டு குப்பைத்தொட்டிக்குப்போயிற்று. அம்மட்டோ? அவர் இங்கு பகிஷ்காரம், பகிஷ்காரம் என்று சொல்லிவிட்டு சீமைக்குத் தேக சுகத்தை முன்னிட்டுச் செல்வதாகச் சொல்லிப்போய் அங்கு பல ஆங்கிலேயர்களையும், அரசியல் வாதிகளையும் ஒருவர் பாக்கியில்லாமல் நேரில் கண்டு பேசி தம்முடைய திட்டத்தை அவர்களிடம் கொடுத்து அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சினார். இதெல்லாம் பகிஷ்காரமா, அல்லது ஒத்துழைப்பா? இனி "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீ ஏ. ரெங்கசாமி அய்யங்கார் ஒரு திட்டம் தயாரித்து அனுப்பினார். அதுவும் பார்லிமெண்டு குப்பைத் தொட்டிக்கு இரையாயிற்று. அனிபெசண்டு அம்மையார் குடியாட்சி மசோதா ஒன்று தயாரித்து அனுப்பினார். அது ஒன்றரை வருஷமாகப் பார்லிமெண்டில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மாது இங்கிலாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்து வீடு வீடாகச்சென்று அதற்குச்சம்மதம் வாங்கிக்கொண்டிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் தாங்கள் கெட்டுப்போவதல்லாமல் மற்றக் கட்சிகளையும் கெடுக்கும்பொருட்டு சர்வகட்சி மகாநாடொன்று கூட்டி கமிஷனை பகிஷ்கரிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டு மற்றொரு அரசியல் திட்டத்தைத் தயாரித்து கமிஷன் கால்களில் வைத்துப் பூசை செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பண்டித நேரு ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார். அதுவும் கமிஷனுக்கு அனுப்பவே தயாரிக்கப்பட்டிருக்கிறதென்று நான் திட்டமாகக் கூறுகிறேன். ஆகவே அவர்கள் ஒவ்வொருவரும், தலைக்குப், தனித்தனியாக திட்டங்களும், அபிப்பிராயங்களும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி பார்ப்பனர் சபையொன்று ஒரு யாதாஸ்து தயாரித்து அனுப்பியிருக்கின்றது, பார்ப்பனர்களெல்லாம் இவ்விதம் ரகசியமாக தங்களுடைய குறைகளையும், அபிப்பிராயங்களையும் கூறிக்கொண்டு வருகையில், பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஏன் நமது குறைகளை சர்க்காரிடம் சொல்லிக்கொள்ளக் கூடாதென்பது எனக்கு விளங்கவில்லை. இனி மற்ற மாகாணங்களெல்லாம் கமிஷனை பகிஷ்கரித்து விட்டதென்றும், சென்னை மாகாணம் மட்டும்தான் கமிஷனை பகிஷ்கரிக்க மறுக்கிறதென்றும், அதற்குப் பார்ப்பனரல்லாதார் தான் காரணமென்றும் பார்ப்பனர்கள் இப்போது பறை சாற்றி வருகிறார்கள். நமது குறைகளை சர்க்காரிடத்தில் உள்ளபடி கூறுவதினாலோ, அரசியல் புரட்டுக்களை எடுத்துக் காட்டுவதினாலோ நாம் தேசத் துரோகிகளாக மாட்டோம். இதுவரை நாம் பார்ப்பனர்களிடமிருந்து ஒத்துப் பாடியும் அவர்கள் நம்மை லட்சியம் செய்தார்களா? இதிலிருந்து அவர்கள் நம்மை ஏமாற்றுவதற்கே பகிஷ்காரக் கூச்சல் போடுகிறார்களென்பது தெரியவரும். நாம் இதுவரை ஏமாந்து வந்தது போதும். கோயமுத்தூர் மகாநாட்டில் கவர்னர் மீது நம்பிக்கை யில்லை என்ற ஒரு தீர்மானம் செய்யப்பட்டபோது இந்தப் பார்ப்பனர்கள் கவர்னரிடம் ஓடிப்போய் இதுவரை ஜஸ்டிஸ் கட்சிக் காரர்களை நல்லவர்களென்று எண்ணிக் கொண்டிருந்தீர்கள். பாருங்கள், இப்போது உங்களையே விரட்டவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்' என்று கூறினார்கள். இப்படிப்பட்டவர்களை நம்பலாமா? இதுவரை நாம் அவர்களுடைய பேச்சைக் கேட்டு ஏமாந்து வந்தது போதும். ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குறைகளை சர்க்காரிடம் சொல்லிக்கொள்வதில் குற்றமில்லை. கடைசியாக நான் என்ன சொல்கிறேன் என்றால், பார்ப்பனரல்லாதார் அரசியல் விஷயத்தில் தனித்து நின்றால்தான் உண்மையான விடுதலை பெற முடியுமேயல்லாமல் பார்ப்பனருடன் கலந்தால் அவர்கள் நம்மை அரசாங்கத்திற்குப் பலிகொடுத்து கூலிபெற்றுக்கொள்வார்கள் என்பதுதான் என்று பேசி முடித்தார். (பெரிய கரகோஷம்)

### திவான் பகதூர் திரு குமாரசாமி ரெட்டியார் தற்கால ராஜீய நிலைமை

என்பதுபற்றி பேசியதாவது:—

தலைவர் அவர்களே கனவான்களே!

இனி நாம் தற்கால ராஜீய நிலைமையைப்பற்றி ஆராய்வோம். தேச சரித்திரத்தின் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நாம் காலம் கழித்து வருகின்

ளோம். இந் நாட்டிற்கு சைமன் கமிஷன் வருவதை மட்டும் ஒரு காரணமாகக்கொண்டு இது ஒரு முக்கிய சந்தர்ப்பமென்று கூறவில்லை. அதற்கு மற்றொரு காரணமும் இருக்கின்றது. நமது மாபெருந் தலைவர் ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் தோற்றுவித்திருக்கும் மாபெரும் இயக்கமாகிய சுயமரியாதை இயக்கத்தின் நிழலில் நாம் இருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்' சமிஷனுடன் ஒத்துழைப்பதற்காகவே இவ்வியக்கம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. கமிஷனுக்கும் இதற்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை, இவ் வியக்கம் விசாலமானநோக்கத்துடன் சமூக நீதியை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரான்சில் ஜீன்ரேவியோ எப்படி ஒரு இயக்கத்தை ஆரம்பித்தாரோ அவருக்கு ஒப்பாக நமது தலைவர் ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களையும் அவரது இயக்கத்தையும் சொல்லலாம். அவ்வியக்கத்தின் பயனாக நாட்டில் சமூக விழிப்பு ஏற்பட்டுவிட்டது. சென்னை வாசிகளாகிய நீங்கள் அவ்வியக்கத்தின் முக்கியத்தை உணராதிருக்கலாம். ஆனால், கிராமவாசிகளாகிய நாங்கள் அதன் பெருமையை நன்கு அறிகின்றோம். ஏனெனில் ஜாதி உயர்வும் மக்களை மக்கள் கொடுமைப் படுத்திவதைப்பதும் நகரப் புறங்களைவிட நாட்டுப்புறங்களில்தான் அதிகமாக தலைவிரித்தாடியது. எல்லாவகுப்பினருக்கும் சமுதாய சம்மந்தமாக சமத்துவமான நீதி வழங்கப்படவேண்டுமென்ற உணர்ச்சி ஜனங்களுடைய மனதில் முன்னைவிட இப்போது ஆழமாகப் பதிந்து வருவதற்கு ஸ்ரீ நாயக்கரின் சுயமரியாதை இயக்கமே காரணமாகும். இவ்வியக்கத்தைஆரம்பித்த ஸ்ரீ நாயக்கர் அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இத்தனை வருஷங்களாக நம் நாட்டில் நிலைத்திருந்த அந்நிய ஆட்சி நம்முடைய ராஜீய முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி விட்டதெனினும் சமூக விஷயத்தில் நாம் கொடுமைப் படுத்தப்பட்டு வந்திருப்பது அதிலும் அதிகம். இப்போது மக்கள் சமூக விஷயத்தில் விழித்துக் கொண்டார்கள். பிறப்பினால் உயர்ந்த ஜாதியென்று இனி சொல்லிக்கொள்வது முடியாத காரியம். அதற்காகத்தான் நாம் மிகவும் நெருக்கடியான காலத்தில் வாழ்கிறோமென்று கூறினேன் ராயல் கமிஷன் கர்ப்பமாவதற்கு முன்னமேயே சுயமரியாதை இயக்கம் தோன்றிவிட்டது. ஆதலால் அதற்கும் இதற்கும் சம்மந்தமில்லை.

### சைமன் கமிஷன்.

சைமன் கமிஷன் சம்மந்தமாக நாங்கள் ஆதியில் கொண்டிருந்த அபிப்பிராயத்திலிருந்து இப்போது மாறுபட்டிருக்கிறோம். இதற்குக்காரணமென்ன வென்பதைக்குறித்து நாங்கள் பலதடவைகளில் பேசியிருக்கிறோம்சைமன் கமிஷன்நியமிக்கப் பட்டுவிட்டதாக முதல் முதல் அறிவிக்கப்பட்ட போது முதலாவதாக அதைக்குறித்து அபிப்பிராயம்கூறியவர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர் அவர் அப்போது இலங்கையில்சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தார்; பத்திரிகைப் பிரதிநிதி ஒருவர் அவரை கமிஷன் பகிஷ்காரம் சம்மந்தமாக அபிப்பிராயம் கேட்டபோது அவர் கமிஷனை பகிஷ்கரிப்பதில் தமக்கு ஆட்சேபனையில்லை யென்றும், ஆனால் எல்லோரும், பொதுவாக உண்மையுடனும் வெளிவேஷமில்லாமலும் பகிஷ்கரித்தாலொழிய பகிஷ்காரம் வெற்றி யடையாது என்றும்கூறினர். ஆரம்பத்தில் நாங்கள் பகிஷ்காரத்தின் நிலையையும் அதன் உட்கருத்தையும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் நமது தலைவர் ஸ்ரீ ராமசாமி நாயக்கர் மட்டும் அதன் உட்கருத்தை அப்போதே கண்டுகொண்டார். அவர், பகிஷ்காரம் நம்மை ஏமாற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமென்று கூறினார். இது ஒருபக்கமிருக்க நாங்கள் ஏன் முதலில் கமிஷனை பகிஷ்கரித்தோம் பின்பு அத்தீர்மானத்தை ஏன் மாற்றிக் கொண்டோமென்பதைப்பற்றி சிறிது கூறுகின்றேன் நாங்கள் கமிஷனுடன் ஒத்துழைக்க முடிவு செய்திருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

### நேரு கமிட்டி அறிக்கை.

நேரு கமிட்டி திட்டம் புதியதோர் சகாப்தத்தை உண்டுபண்ணக் கூடியதென்பதில் சந்தேகமில்லை அத்தகைய திட்டம் ஒன்றைத்தயாரிக்க முடிந்ததற்கு நான் அவர்களைப் பாராட்டுகிறேன் அத்திட்டம் ஒவ்வொருவருக்கும் பெருமையையே யளிக்கின்றது ஆனல் இங்கிலாந்தில்கூட மூன்று பேர்கள் சேர்ந்து ஒரு புதிய சகாப்தத்தை உண்டு பண்ணத்தக்க அரசியல் திட்டம் ஒன்றைத் தயாரிக்க முடியாதென்று கூறுவேன் எப்பொழுது இவர்கள் ஒருதிட்டத்தை தயாரித்து வெளியிட்டு விட்டார்களோ உங்களையும் என்னையும்விட பண்டித நேருவும் அவருடைய கூட்டாளிகளுமே கமிஷனுடன் அதிகமாக ஒத்துழைத்தவர்களாகின்றார்கள் அவர்கள் இந்த திட்டத்தை தமாஷாக்காகத் தயாரிக்கவில்லை சைமன்கமிஷனுக்கு அனுப்பும்பொருட்டே தயாரித்துள்ளார்கள் இத் திட்டத்தை ஒப்புக்கொண்டஎந்தகட்சியாராவது இனி பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறுவார்களானல் நான் அதை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்பேன் இத்திட்டம் சைமன் கமிஷனுக்கு அனுப்புவதாக இல்லாவிட்டால் பின்பு வேறு யாருக்கு? இதனல் இந்த உலகத்திற்கு என்ன நன்மைவிளையப்போகின்றது? இத்திட்டம் வெளியிடப்பட்டதும் சென்னை சட்டசபை சுயராஜ்பகட்சி உப தலைவர், ஸர் ஜான் சைமன் தங்களை 6, 7 பேர்களை அழைத்து வட்டமேஜை மகாநாடு கூட்டி இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டத்தைப்பற்றி விவாதிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லையென்றுகூறினர் அவர் பின்பு சென்னை சட்டசபையில் என்ன கூறினர். தெரியுமா? சைமன் கமிட்டி தீர்மானம் சட்டசபை விவாதத்திலிருக்கும்போது நான்பேசுகையில், இப்போது ஸர் ஜான் சைமன் வட்ட மேஜை மகாநாடு கூட்ட ஒப்புக்கொண்டுவிட்டால் சுயராஜ்யக்கட்சிக்காரர்கள் உடனேகமிஷனை ஒப்புக்கொண்டு ஏழுமெம்பர்களைத் தேர்ந்தெடுத்து ஸர்ஜான் சைமனுடன் வட்டமேஜை மகாநாட்டில் உட்கார்ந்து விவாதிக்கமாட்டார்களா வென்று கேட்டேன். நேரு கமிட்டி திட்டம் பகிஷ்காரத்துக்குச் சாவுமணி யடித்துவிட்டது. அரசியல் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் இப்போத ஜனங்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை அதற்கு இது காலமல்ல சொல்லுகிறபடி நடத்திக்காட்டும் அரசியல் வாதிகள் தேசத்துக்காக வேலை செய்வதற்கு இது நல்ல தருணம் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நடத்தையில் கொண்டுவரும் போது தான் கஷ்டம் தோன்றும்

கமிஷன் ஒரு வெள்ளை யானை யென்றும் அது இந்தியா மீது படையெடுத்து வருகிற தென்றும் சொல்லப்படுகிறது. அது இந்தியாவுக்கு எப்படியோ வந்துவிட்டது; அதை நம்மால் துரத்தமுடியாது; கடுமையான ஆயுதங்களாகிய பகிஷ்காரம் ஹர்த்தால் முதலியவைகளால் நாம் அதைத் துரத்தமுடியவில்லை நமது தலைவர் ஸ்ரீ நாயக்கர் அவர்கள் சொல்லியபடி எல்லா மாகாணங்களும் கமிட்டி நியமித்துவிட்டன ஆகையால், இச் சமயம் சென்னை மாகாணம் மட்டும் கமிட்டி நியமிக்க மறுத்துக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகுமா வென்றுதான் கேட்கின்றேன் ஆகையால் நாம் நம்முடைய குறைகளை கமிஷன் முன் எடுத்துக் கூறி அவர்களுடன் கூடியவரை ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும் ஆரம்பத்தில் கமிஷன் அறிக்கையைப்பற்றி எங்களுக்கு சில சந்தேகங்களிருந்தன சைமன் கமிஷன் தீர்மானம் சென்ற ஜனவரியில் சட்ட சபையில் வந்தபோது எங்கள் கட்சி மெம்பராகவும் இப்போது சட்டமெம்பராகவுமிருக்கும் திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர் கமிஷனை பகிஷ்கரிக்கும் பொருட்டு ஒரு தீர்மானம் கொண்டுவந்தார் ஏனெனில் அப்போது நாங்கள் கமிஷன் வேலைத் திட்டங்கள் சந்தேகத்துக்கிடமாயிருக்கிறதென்றும் அது தெளிவாக விளக்கப்பட்டாலொழிய நாங்கள் கமிஷனுடன் ஒத்துழைக்கமுடியாதென்றும் கூறினேம் இப்போது கமிட்டி வேலைகள் அதன் அந்தஸ்து முதலியவைகள் நன்கு விளக்கப்பட்டுவிட்டன ஆதலால் நாங்கள் கமிஷனுடன் ஒத்துழைப்பதுநியாயமென்றே கூறுவேன் மேலும் நாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் மக்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றே கூறுகின்றனர் தென்னிந்தியாவில் பார்ப்பனரல்லாதார் சமூகம் ஒவ்வொன்றும் ஒத்துழைக்கின்றது பார்ப்பனர்களும் ஒத்துழைக்கின்றார்கள் எங்களுடைய நிலைமையை விளக்குவதற்கே இத்தனை உதாரணங்கள் கூறினேன் நீங்களும் எங்களுடைய அபிப்பிராயத்துக்கு ஒத்திருப்பீர்களென்று நம்புகிறேன் ஒத்துழைப்புக் கமிட்டிக்கு நம்முடைய கட்சியிலிருந்து நான் உள்பட மூன்று மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் அவர்கள் பார்ப்பனரல்லாத சமூகத்துக்குக் கௌரவத்தை சம்பாதித்துக்கொண்டுவருவார்கள் என்று நான் உறுதி கூறுவேன் அவர்கள் உண்மையான தேசிய வாதிகள் அவர்கள் பெரும்பான்மையார்களின் உண்மைப் பிரதிநிதிகள் ஆகையால் நாங்கள் தேசத்துக்கு எங்களாலியன்ற நன்மையைச் செய்வோம் என்று பேசி முடித்தார்,

பிறகு திருவாளர்கள் வி சக்கரை, ஆரியா ஆகியவர்கள் திரு நாயக்கரை ஆதரித்துப்பேசினார்கள்

### ஜடயாந்தம் ஏழை மாணவர் முன்னேற்றக் கழகம்

அன்பர்களே இப்பொழுது நம்நாட்டில், முன்னேற வேண்டுமானல் முதலில் கல்வியை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் இஃது மற்றைய தொழிலைப்போல் சீக்கிரத்தில் முடியக்கூடியதல்ல நம் நாடோ ஏழைகளால் நிறைந்த தொன்றாகும் அநேக ஏழைப்பிள்ளைகள், படிப்பதற்கு வல்லமையற்று, சிறிதும் மனிதவுணர்வின்றியே மடிகின்றனர் இதற்காக அறிஞர்கள் தக்கமுயற்சி எடுத்து தங்கம் நாட்டில் பலகழகங்கள் ஏற்படுத்தி ஏழை மாணவர்களை இலவசமாக கல்வி பயிலச் செய்தால் நம்நாடு விரைவில் முன்னேற்றமுறும் ஆதலால் இவ்வெண்ணம் சிறிது பூண்டு எங்களால் கூடிய தொண்டாற்றி சில மாணவர்களை சாதி சமய பேதமின்றி முன்னுக்குக் கொண்டு வரலாம் என்ற பணியை மேற்கொண்டனம் இதனைக்கண்ணுறும் அன்பர்கள் திங்கள் திங்களாகவோ அல்லது மொத்தமாகவோ அவரவர் விருப்பத்தின் படி பொருள் கொடுத்து ஆதரிக்கவேண்டுகின்றோம்.

தலைவர் தி, அ, ரங்கசாமி,

### மதுரை ஜில்லா பார்க்கவ குல மகாநாடு,

இம்மகாநாடு திண்டுக்கல் தாலூகா தர்மத்துப் பட்டி கிராமத்தில் ஸ்ரீ ஞானியார் ஆசிரமத்து தலைவர் உயர்திரு ம ரா குமார சாமியார் அவர்கள் தலைமையில் செப்டம்பர் 17-ஆம் நாளிலும் உயர்திரு ஆர் கந்தசாமி மூப்பனர் பி எ பி எல் அவர்கள் தலைமையில் செப்டம்பர் 18-ஆம் நாளிலும் நடைபெறும்,

திருவாளர்கள் சனக சங்கர கண்ணப்பர், திரு வி கல்யாணசுந்தர முதலியார், சாமி சிதம்பரனர் ஈ வெ ராமசாமி நாயக்கர் முதலிய அறிஞர்கள் விஜயம்செய்து சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்,

மா வெ துரைசாமி,

# திரு. சண்முகம் செட்டியாருக்கு டாக்டர் நாயர் கல்விக்கழகத்தார் அளித்த உபசாரம்.

## திரு. செட்டியாரின் பேருரை.

சென்னை டாக்டர் நாயர் கல்விக் கழகத்தார் செப்டம்பர் 6 மாலை திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாருக்கு சங்கச்சாரபாக பச்சையப்பன் மண்டபத்தில் உபசாரப் பத்திரமொன்று வாசித்துக் கொடுத்தனர். பத்திரமளிப்பதன் பொருட்டு கூடிய பெருங்கூட்டத்திற்கு சென்னை வாசிகளும் மாணவர்களும் ஏனையோரும் பெருந்திரளாக வந்திருந்ததுடன் முக்கியமாக திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், சிதம்பரநாத முதலியார், சுரேந்திரநாத் ஆரியா, கே. ஆர். சேஷய்யங்கார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஜே. எஸ். கண்ணப்பர், தத்தே ரங்கய்ய நாயுடு, தண்டபாணி பிள்ளை முதலானவர்களும் மற்றும் பலரும் வந்திருந்தார்கள். அக்கூட்டத்திற்கு திவான் பகதூர் எஸ். குமாரசாமி செட்டியார் எம். எல். சி. தலைமை வகித்தார்.

திவான் பகதூர் குமாரசாமி செட்டியார் அவர்கள் முகவுரைக்குப்பின் பெருத்த கரகோஷத்தினிடையே திரு. சுரேந்திரநாத் ஆரியா அவர்கள் டாக்டர் நாயர் கல்விக் கழகத்தின் சார்பாக திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாருக்கு உபசாரப் பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தார்.

### திரு. சண்முகம் செட்டியார்.
### சொற் பொழிவின் சுருக்கம்.

பிறகு திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பத்திரத்திற்குப் பதிலளித்துப் பெரும் கரகோஷத்திடையே பேசியதாவது:- தலைவர் அவர்களே, சுரேந்திரநாத் ஆரியா அவர்களே: நண்பர்களே! நீங்கள் இன்று மாலை எனக்கு உபசாரம் செய்து வரவேற்பளித்ததுடன் என்மீது அன்புகாட்டிப் பல அரும் மொழிகள் கூறியதற்கு நான் உங்களுக்கு என்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'நான் மேனாடுகளுக்குச் சென்று ஏதோ சொற்ப தொண்டாற்றியிருப்பதை வெகுவாகப் புகழ்ந்து நான் மேனாட்டுப் பிரயாணத்திலிருந்து திரும்பிவந்தது முதல் எனக்கு எங்கும் பத்திரங்கள் வாசித்துக் கொடுப்பதும் வரவேற்பளிப்பதுமாக விருப்பதனால் அதுஎன்னை மிகுந்த சங்கோஜமானநிலைமையிலிழுத்து விடுவதாகத்தானிருக்கிறது. இவற்றால் நான்பெருமைப்படுவதற்குப் பதிலாக கூச்சமும் சங்கோஜமும் படவேண்டியவனுயுமிருக்கிறேன். என் நண்பர்களின் அன்புமொழிகளில் எனக்கு ஒரு வழியில் ஊக்கமுண்டாவதற்காக நான்சந்தோஷிக்காமலிருக்க முடியாது. இப்பத்திரம் மகத்தான இந்தியத் தலைவரின் பெயரால் (பெருத்த கரகோஷம்) ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கழகத்தாரால் அளிக்கப் பட்டிருக்கின்றது. அவர் பொது ஜனங்களின் முன்னேற்றத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு துவக்கிய இயக்கத்தையும்உழைப்பையும் தூற்றுவதற்கு அகராதியைப்புரட்டிப்புரட்டி பதங்கள்பொருக்கப்பட்டன. (நகைப்பு) அத்தகைய ஆசாமிகள் இன்னும் இல்லாமற் போகவில்லை. எவ்வளவு தூற்றப்பட்டும் இடைஞ்சல்கள் செய்யப்பட்டும் டாக்டர்நாயர் இந்திய தேசியத்திற்குச் செய்துள்ள நன்மைகள் செப்பத்தரமன்று (பெருத்த கரகோஷம்) டாக்டர் நாயரின் உழைப்பில்லாவிட்டால் சென்னை மாகாணம் சுயாட்சிக்கு தகுதியாயிராதென்பது திண்ணம் (நீண்ட கரகோசம்) இந்தியாவின் பலபாகத்திலும் பின்னடைந்த வகுப்புகள் தேசியமுன்னேற்றத்துக்குத் தடைகளாக இருக்கின்றன. ஒரு சங்கிலியில் சில வளையங்கள் பலவீனமாயிருந்தால் சங்கிலிக்கு எவ்வளவு ஊனமோ அவ்வாறே பின்னடைந்த வகுப்புகள் முன்னேற்றமடையாதிருப்பது தேசிய முற்போக்குக்குத் தடைகளான முட்டுக்கட்டைகளாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தேச முற்போக்கு பொது ஜனங்களின் முன்னேற்றத்தினாலேற்படக்கூடுமேயன்றிசிலமுன்னேறியவகுப்புகளினாலல்ல. என் ராஜீயக் கொள்கைகள் சமுதாய நீதிவழங்கும் விஷயத்திற்கு ஒருபோதும்முரண்பட்டிருந்ததில்லை. (கரகோஷம்.)

நான் சமுதாயநீதி வழங்கும் விஷயத்தில் உறுதியாக நிற்பதனால் என்னை ராஜீயத் துறையில் தீண்டாதவனாக்கப் பட்டது. ஆயினும் நான் என் கடமையில் சிறிதும் பின்வாங்காது சமுதாய நீதி வழங்கும்துறையில் குன்றா ஊக்கத்துடன் என்றும் பாடுபட்டுத்தான் வருகின்றேன் நான் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஜினிவா மகாநாடும் சமுதாய நீதி வழங்குவதான கொள்கையை முன்னிட்டுத்தான்கூட்டப்பட்டது. அம்மகாநாடுஉலகத்தில் சமுதாய நீதி வழங்குதல், சர்வதேச சமரச கொள்கையை நிலைநாட்டுதல், அமைதியையும் சமாதானத்தையும் பரவச் செய்தலான முக்கிய நோக்கங்களுடன் கூட்டப்பட்டதாகும்.

லண்டனுக்கும் மற்றைய ஐரோப்பிய நகரங்களுக்கும் சென்றுதிரும்புபவர்களைஏதோ மர்மம் சூழ்ந்திருப்பதாக நினைத்துக் கொள்ளப்படுவது அநேகமாயிருக்கின்றது. அத்தகையவர்கள் தாங்கள் சென்று சாதித்து வந்ததைக் குறித்து அதிகமாகச் சொல்லிக்கொள்வதிலிருந்து அவர்கள் எதுவும்செய்ய முடியாது வந்தனர் என்பதைநீங்கள் எளிதிலறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. (நகைப்பும் கரகோஷமும்) ஆயினும் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகின்றேன். மேனாடுகளுக்கு யார் எவ்வளவு சென்றாலும் நற்பலன் எதுவும் ஏற்படப்போவதில்லை. நம் நாட்டுக்கு கதிமோட்சமேற்பட வேண்டுமானால் பல்வேறு வகுப்புகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட்டிருப்பது போல பகட்டாக ஒற்றுமை வேஷம் காட்டாமலும் அல்லது ஒட்டுப் போட்ட ஒப்பந்தங்களில் நம்பிக்கையும் சந்தோஷமும் கொள்ளாமலும் பல்வேறு வகுப்புகளுக்குள்ளும் உண்மையும் சாஸ்வதமுமான ஒற்றுமையும் நட்புரிமையும் சமரச உணர்ச்சியு மேற்படச் செய்யவேண்டும். சிலர் மேனாட்டு ராஜீயக்கொள்கையையும்சித்தாந்தங்களையும் எடுத்துக் கொண்டு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தினாலுண்டாகும் தீமைகளைக்குறித்துப் பேசுவார்கள். இந்நாட்டின் வகுப்பு வித்தியாச அநீதிகளிலிருந்து வருவதைக் கண்டித்து ஒழிக்க முயலுவதன் மூலமாக மட்டுந்தான் தேசியத்தை நன்கு முன்னேற்றுதற்கியலுமேயன்றி அவைகளை மூடுவதால் எவ்வித நன்மையும் உண்டாகாது. எனக்கு உபசாரம் செய்து பத்திரமளித்ததற்கு மீண்டு மொருதரம் உங்களுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

பிறகு பெருத்த கரகோஷத்தினிடையே பேசியதின் சாரம்:—

திருசெட்டியார் அவர்களைக் குறித்து நான் விரிவாக ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவரை நீங்கள் என்னைவிட நன்கறிவீர்களென்றே நினைக்கிறேன். திரு. செட்டியார் பேசியதைமறந்து அதற்குவிரோதமாக நடப்பவரல்லர் (நகைப்பு)பள்ளிக்கூடத்தில் சிறுவர்களுக்கு சூரியனை பூமி சுற்றுகின்றது அதனால் இரவும்பகலும் வருகின்றது என்று பல சாஸ்திரீயமான விஷயங்களைப் போதித்து விட்டு வீட்டுக்குச் சென்றதும் மறுநாள் ஆசிரியர் கிரகணம் என்று நூறுதரம் தலை முழுகி தர்ப்பைப் புல்லால் தர்ப்பணம் செய்வதும் இதற்குப் பொருத்தமான உதாரணமாகும், (நகைப்பு) மகாத்மா காந்தி வந்து திரு. செட்டியார்வீட்டில் தங்கியிருந்த போது அவர் காந்தியிடம் நம்நாட்டிலிருந்து மதசம்பந்தமான மூடப்பழக்கங்கள் என்று ஒழிகின்றதோ அன்றுதான் விடுதலையுண்டாகுமென்று தைரியமாய்க் கூறினர்.

நம் நாட்டு மூட பழக்க வழக்கங்களைத் தைரியமாகக் கண்டித்து, மேனாட்டு மேலான கொள்கைகளைச் சிலாகித்து, நேர்மையாக எங்கு வேண்டுமானாலும் பேசுவதற்கும் குற்றங்களைக் கண்டிப்பதற்கும் அவர் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. கும்பகோணத்தில் கூடிய நாடார் வகுப்பார் மகாநாட்டில் அவருக்கு வாணிபச் செட்டிமார்கள் வாசித்துக் கொடுத்த பத்திரத்திற்குப் பதிலளிக்கும்போது அவர் பிறர் தம்மைக் குறித்து என்ன சொல்லுவார்கள் என்பதைக் கவனியாது தைரியத்துடன் அவ் வகுப்பாரிடத்துள்ள குறைகளையும் மூட நம்பிக்கைகளையும் வெளியிட்டுத் திருத்த முயன்றது பாராட்டத் தக்கதேயாம். சமீபத்தில் திரு. செட்டியார் இந்தியா சட்டசபையில் பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட வேண்டுவதையும் மற்ற வித்தியாசங்களை ஒழிக்கவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தத் தீர்மானமொன்று கொண்டுவர உத்தேசித்திருப்பதாகக் கூறினர். அக்கமிட்டியில் திரு செட்டியார் அவர்களும் ஒருவராயிருக

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# "புண்ணியஸ்தலங்கள்"

## பண்டரிபுரம்

(சித்திரபுத்திரன் எழுதுவது)

இதிகாசங்களைப்பற்றியும் புராணங்களைப் பற்றியும் கடவுள்களைப்பற்றியும் தனித் தனிமகுடமிட்டு 'குடி அரசில்' எழுதிக்கொண்டு வருவதை வாசகர்கள் கூர்ந்து கவனித்து வாசித்து வருகின்றார்கள் என்றே எண்ணுகின்றேன். அவற்றை எழுதி வருவதின் நோக்கமெல்லாம், ஒரு சில சுயநலக்காரர்கள் தங்கள் நன்மையின் பொருட்டு எவ்வளவு ஆபாசமான வைகளையும் அசம்பாவிதமான வைகளையும் வெகு சாதாரணமானவைகளையும் எழுதி வைத்துக்கொண்டு பிரமாதப்படுத்தி, அவற்றையே மதம் என்றும் பக்தி என்றும் மோக்ஷத்திற்கு மார்க்கம் என்றும் பாமர மக்களை நம்பும்படியாகச் செய்து, மக்கள் அறிவையும் சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் ஒற்றுமையையும் கெடுத்து வருகின்றார்கள் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டி மக்கள் யாவரும் சமம் என்பதையுணர்ந்து சுயமரியாதையோடு வாழவேண்டுமென்பதுதான்.

ஷை சுயநலக்காரர்கள் சிற்சில இடங்களைப் பெரிய புண்ணியஸ்தலம் என்பதாக பெயர் கொடுத்து அவற்றிற்கு ஏராளமான யோக்கியதைகளைக் கற்பித்திருப்பதை பகுத்தறிவற்ற மூட ஜனங்கள் புண்ணிய ஸ்தல யாத்திரை என்பதாகக் கருதி வெகு பணங்களைச் செலவு செய்துகொண்டு அந்தந்த ஊர்களுக்குப் போய் புத்தியையும் தங்கள் காலத்தையும் பணத்தையும் வீணில் பறிகொடுத்துவிட்டு வருவதுடன் தாங்கள் இதுவரை செய்த அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் இந்த யாத்திரையில் மன்னிக்கப்பட்டு விட்டதாகக் கருதி மேலும் மேலும் புதிய அக்கிரமங்களையும் அயோக்கியத்தனங்களையும் செய்ய தைரியமுடையவர்களாக ஆக இடம் கொடுத்து வருகிறது.

ஸ்தல யாத்திரை என்று சொல்லப்பட்டு வந்ததானது ஒரு காலத்தில் மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கும் உலக அனுபவப் பயிற்சிக்கும் அனுகூலமாகத் தக்கினதாய் இருந்திருக்கலாம். எப்படியெனில் ரயிலும் போக்குவரத்து வசதியும் இல்லாத காலத்தில், மக்கள் ஒரே இடத்தில் இருந்து கொண்டிருந்ததால், உலக அனுபவம் தெரிந்துகொள்வதன் பொருட்டு வெளியிடங்களைச்சுற்றிப் பார்த்து வருவதற்காக ஸ்தலயாத்திரை என்பதின் பேரால் போய் வரும் வழக்கம் அனுகூலத்தைக் கொடுத்திருக்கலாம். ஆனால் இப்போது ரயில் வசதி ஏற்பட்டு விட்டதாலும் சுலபத்தில் ஒவ்வொரு இடத்து சங்கதிகளும் தன்மைகளும் பத்திரிகைகளின் மூலமாய் தெரிந்து கொள்ளுவதற்கு அனுகூலமாய் இருப்பதாலும் இப்போது புண்யஸ்தல யாத்திரை என்பதின் பேரால் அனாவசியமாக மக்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். தற்காலத்திய புண்ணியஸ்தல யாத்திரைகளின் யோக்கியதைகளைப் பற்றியும் யாத்திரைக்காரர்களின் யோக்கியதைகளைப்பற்றியும் புண்ணிய ஸ்தலங்களிலுள்ள பண்டாரங்கள், பூசாரிகள், குருக்கள் முதலியவர்கள் யோக்கியதைகளைப் பற்றியும் அதனால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப்பற்றியும் நாம் அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அதுபல தடவை 'குடி அரசி'லேயே பல தலைப்பின் கீழ் வந்திருக்கின்றது, இன்னும் வர இருக்கின்றது. ஆதலால் அந்த ஸ்தலங்களின் பெருமைகள் என்பவைகளைப் பற்றி மாத்திரம் எழுதலாம் என்று இந்த விஷயம் தொடங்குகின்றேன்:—

### பண்டரிபுரம்.

முதல் முதல் பண்டரிபுரம் என்பதின் யோக்கியதையைப்பற்றி எழுத துணிகின்றேன்.

பதும புராணத்தில் உமாதேவியின் அறிவு பிரகாசிக்கும் பொருட்டு சிவபெருமான் சொல்லியருளிய பண்டரிபுரத்தைப்பற்றிய கதையை ஸ்ரீதரர் விஸ்தரிக்கிறார்:—

கைலாச பர்வதத்தில் ஓர் காலத்தில் எழுந்தருளி யிருந்தபோது உமாதேவியார் சிவபெருமானை நோக்கி "தில்வுலகில் பண்டரிபுரத்தில் திருமால் நித்யவாசம் செய்வது யாது காரணத்தால்" என்று கேட்டதாகவும்; அதற்கு சிவபெருமான் சொல்வதாகவும் கதை ஆரம்பிக்கப்படுகிறது.

1. கொடியேரல்லவளே! திருமாலானவர் வைகுந்தத்தில் வீற்றிருக்கும் காலத்தில் இந்திராணி அவரைக் கண்டு மோகித்து "இறைவனே! நான் உமது மடியிலிருக்க வேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன்" என்று பிரார்த்திக்க, திருமால் இரக்கங்கொண்டு 'நீ பூலோகத்திற்குப் போய் 60000 வருஷம் தவம் செய்தால் நான் துவாரகாபுரியில் கிருஷ்ணனாகாம் செய்து உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன்' என்று சொல்ல, இந்திராணி அப்படியே நிலவுலகில் சென்று 60000 வருடம் தவம் செய்து கோகுலத்தில் ராதையாகப் பிறந்து வளர்ந்து, திருமால் கிருஷ்ணனாக அவதரித்து எழுந்தருளியிருக்கும் துவாரகாபுரிக்குச் சென்று அவரை வணங்க, கிருஷ்ணன் ராதையை இன்னாளென்று அறிந்து வாரியெடுத்து தன்மடிமீது வைத்துக்கொள்ள, இதைக்கண்ட கிருஷ்ணனின் மனைவியான ருக்மணி கோபங்கொள்ள, அதைக் கண்டு ராதை கிருஷ்ணனை விட்டுநீங்கி திண்டீர வனத்திற்குப் போய் கிருஷ்ணன் தனக்கு கணவனாக வேண்டுமென்று தவம் செய்ய, கிருஷ்ணன் ருக்மணியை விட்டுவிட்டு துறவி வேடம் பூண்டு ராதையைத் தேடித் திரிந்து கடைசியாக திண்டீரவனம் என்கின்ற ஓர் வனத்தில் அவளைக் கண்டு 'பிராண நாயகி! என்னைத் தனியே விட்டு இக்கொடிய வனத்திற் கெவ்வாறு வந்தனை' என்று கேட்க, ராதையானவள் கிருஷ்ணனைப்பார்த்து 'உன்னைப் பார்த்தாலே நீ ஒரு வஞ்சகனென்று தோன்றுகிறது. ஆதலால் நீ இங்கு நில்லாமல் ஓடிப்போ' என்று சொல்ல, கிருஷ்ணன் மதிமயங்கி தன் கைத்தடியை முழங்கால்களினால் இடுக்கிக் கொண்டு இடுப்பில் கையை வைத்து மூக்கின் நுனியில் தன் பார்வையை வைத்து விருப்பத்தோடு இன்றைய வரையும் அதாவது 28 சதுர்யுக காலம் ராதையின் முன் நிற்கின்றான். மேலும் பார்வதி!

2. திண்டீரனென்ற கொடிய அசுரன், சூரியனைத் தன் தேர்மீது ஏறிச்செல்லவொட்டாமல் தடுத்து தொந்திரவு செய்துகொண்டிருந்தான். ஆகவே தேவர்கள் திருமாலையடைந்து இந்தச் செய்தியை விண்ணப்பஞ் செய்ய, திருமால் மல்லிகார்ஜுனனெனும் சந்திரன் என்னும் அரசனிடம் பிறந்து வளர்ந்து வேட்டையாட ஷை திண்டீரனென்னும் அசுரன் வசித்த திண்டீரவனம் சென்று அவனோடு ஆயிரம் வருஷம் போர் செய்தும் அவன் தோற்காமலிருக்க கடைசியாக லோகதண்டம் என்னும் கதாயுதத்தை கைக்கொண்டு அவனையடித்து பூமியில் வீழ்த்தினார். அவன் உயிர் விடும்போது 'ஸ்ரீ ஹரி' என்று உச்சரிக்க மல்லிகார்ஜுனன் உடனே திருமாலாக மாறி அவ்வசுரனை நோக்கி 'உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்' என்று அருள, அவ்வசுரன் 'இவ்வனம் லோகதண்டமென்று விளங்கவும், இதில் அழகிய நகரொன்று உண்டாக்கி, நான் இறந்த இடத்தில் என் பேரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதனிடத்தில் உன் கதாயுதத்தை நிறுத்தி, அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி அக்கதாயுதத்தை ஆலிங்கனம் செய்வோர்களுடைய பாபங்களை நிவர்த்திக்க வேண்டும்' என்று வேண்டிக்கொள்ள, திருமாலும் அவ்வரத்தைக் கொடுத்து அசுரனுக்கு வைகுண்டலோகத்தை அளித்தார். அன்று முதல் அந்த வனமானது 'லோகதண்டம்' எனவும் பெயர் பூண்டு விளங்கிக் கொண்டிருக்கிறது.

3. மேலும் கேளும் பார்வதி! அவ்வனத்தில், ஜஹ்னு என்ற ஒரு வேதியர், ஸாத்யகி என்பவளோடு இல்லறம் செய்துகொண்டு வருங்காலத்தில், புத்திரரில்லாமையால் நெடுங்காலம் தவம் செய்து 'புண்டலீகர்' என்ற ஒரு அழகிய மைந்தனைப் பெற்றார். புண்டலீகன் வயதடைந்த பின் அவனுக்கு மணம் செய்வித்து மகிழ்ந்திருந்தனர். புண்டலீகனோ வெகு துஷ்டனாகி தாய் தந்தையரை வைது, அடித்து, துரத்திவிட்டு தன் மனைவியோடு தனியே வாழ்ந்திருந்தனன். துரத்தப்பட்ட தாய்தந்தையர் காசிக்குப் போக எண்ணிப் புறப்பட்டனர். புண்டலீகனும் அவனது மனைவியும் குதிரைமீதேறிக்கொண்டு பின் தொடர்ந்தனர். தாய் தந்தையர் நடக்கமாட்டாமல் தள்ளாடிக்கொண்டு போவதைப் பார்த்தும் புண்டலீகனுக்கு மனமிரங்காமல் பார்த்துக் கொண்டே போய் காசிக்கருகில் ஒரு சோலையில் குக்குடர் என்னும் ஓர் முனிவரது ஆசிரமத்தின் அருகில் இறங்கினான்.

அந்தக் குக்குட முனிவர் தம் தாய் தந்தையரையன்றி வேறு தெய்வமில்லை என்று நினைத்து இரவும் பகலும் அவர்களுக்கு சேவை செய்பவர். இப்படிப்பட்ட அவரது ஆசிரமத்தில் புண்டலீகன் அன்றிரவு தங்கியிருந்தான். அப்படியிருக்கையில், கோர ரூபங்கொண்ட மூன்று பெண்கள் நள்ளிரவில் அவ்வாசிரமத்திற்குள் புகுந்து அதிலுள்ள குப்பைகளைக் கூட்டி தரையை மெழுகி

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

## சுயமரியாதை திருமணங்களும் நன்கொடையும்.

வாஞ்ஞதுரை. 10—9—28 ஆம் நாள் கும்பகோணம், வாஞ்ஞதுரை திரு. கோவிந்தசாமி வைத்தியர் அவர்களின் மகன் திரு. வேணுகோபால் வைத்தியருக்கும், குடவாசல் திரு நடேச வைத்தியர் அவர்களின்மகள் ஸ்ரீமதி அமிர்தவல்லி அம்மாளுக்கும் சென்னை தெ. இ. மருத்துவ சங்கத்தலைவர் திரு. பண்டித S. S. ஆனந்த மவர்களால், மூடபழக்கவழக்கங்களையும் அருத்தமற்ற சடங்குகளையும் ஒழித்து தமிழ் மொழியில் டை திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

பின்னர் பண்டிதர் அவர்களும், திண்டுக்கல் தில்லைநாயகம்பிள்ளை B. A. L. T. அவர்களும், சீய்பாழி, பண்டிட் சி. வா. ஞானசம்பந்தம் அவர்களும், சுயமரியாதைத் திருமணம், பெண்கல்வி, சிக்கனம், கலப்புமணம் ஆகிய பல பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

குல நிதிக்காக ரூ. 2-0-0-ம் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளுக்கு ஒவ்வொரு ரூபாயும் வழங்கப்பட்டது. அங்கிடத்திலேயே "குடி அரசு" பத்திரிகைக்கு 3 பேர்கள் சந்தாதாரர்களாய்ச் சேரவும் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஒருநிருபர்.

செங்குளம், 3-9-28 திங்கள்கிழமைபன்று அம்பாசமுத்திரம் தாலூக்கா செங்குளம் திருவாளர் சிதம்பர நாடாரவர்கள் புதல்வரும், எனக்கு இளையானும், முக்கூடல் க்ஷத்திரிய வித்தியா அபிவிருத்தி சங்கத் தலைவருமான திரு. கனகசபாபதிக்கும், முக்கூடல் திரு. பொன்னையா நாடாரவர்கள் புதல்வி ஸ்ரீமதி தாயம்மாளுக்கும் ஈராக்ஷி ஸ்ரீபரிமேலழகர்சாமி குருக்கள் அவர்களைக்கொண்டு தமிழ்மொழியிலேயே மணம் நடந்தது. இன்று நம் 'குடி அரசு' பத்திரிகைக்கு நன்கொடையாக ரூபாய் ஒன்று அனுப்பப்பட்டது.

கார்ரங்குளம். நாளது ஆவணித்திங்கள் 25-நாள் ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா காரங்குளம் பெ. வெங்கடசாமி நாயக்கர் அவர்கள் குமாரன் வி. பெருமாள்சாமி நாயக்கருக்கு பார்ப்பனப் புரோகிதமின்றி திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இப்பக்கங்களில், அதிலும், கம்மவார் வகுப்பில், இத்தகைய மணம் நடை பெற்றது இதுவே முதல் தடவையாகும் இத்திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு"க்குரூ 2 நன்கொடையாக அனுப்பப்பட்டது. கே. சோம சுந்தரம்.

### புரோகித மற்றகிருகப்பிரவேசமும் 12 9-28 நன் கொடையும்

திருநெல்வேலி சாலியர்தெரு திரு பிச்சன் பண்டிதர் குமாரர்ஸ்ரீ பி பரதேசி பண்டிதர் புதிதாய் அமைக்கப்பட்ட தமது இல்லத்தில் இன்றுகாலை 7–30 மணிக்கு பார்ப்பனப் புரோகிதமின்றி சுயமரியாதையுள்ள பந்துமித்திரர்களுடன் கூடி அன்னம் புசித்தார்கள். "குடி அரசு"க்கு நன்கொடையாக ரூ 0–8–0 வழங்கினர் தி முத்துசுவாமி

(ப-ர் குறிப்பு) அன்பர்கள் அன்புகூர்ந்தருளிய நன்கொடைகளை வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

## சுயமரியாதைத் திருமணங்கள்.

பட்டிவீரன்பட்டி.

1. பட்டிவீரன்பட்டி பிரபல வியாபாரிகளான திருவாளர் பி. கே. கருப்பையநாடார் அவர்கள் திருவளர் செல்வி பொன்னுத்தாயம்மாளுக்கும் திருவாளர் சி. பி. கே. மாயாண்டி நாடார் அவர்கள் குமாரன் செல்வச்சிறஞ்சீவி சுப்பிரமணியநாடார் அவர்களுக்கும்,

2. டை யூர் திருவாளர் கே. எஸ். என் பெரியதம்பி நாடார் அவர்கள் புதல்வி சௌபாக்கியவதி தனலக்ஷ்மி அம்மாளுக்கும், திருவாளர் சி. டி. கே டி. மாரியப்ப நாடார் அவர்கள் புதல்வன் சிறஞ்சீவி ரங்கசாமி நாடாருக்கும் பட்டிவீரன் பட்டியில் சுயமரியாதை முறையில் சென்ற 9-உ ல் திருமணங்கள் விமரிசையாக நடைபெற்றன. அதுகாலை "திராவிடன்" ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பரும், திரு. என். தண்டபாணி பிள்ளையவர்களும், ஈரோடு "குடி அரசு" பத்திராதிபர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும், விஜயம்செய்து திருமணங்களைச் சிறப்பித்தார்கள். மற்றைய விபரம் பின்னர். ஒரு நிருபர்.

ராமலிங்கபுரம், திருநெல்வேலி ஜில்லா சங்கரநயினார் கோவில் தாலூகாவைச் சேர்ந்த ராமலிங்கபுரமென்னும் கிராமத்தில் முதலாவதாக திரு. சங்குத் தேவர் அவர்கள் திருவளர்செல்வன் பேச்சிமுத்துக்கும், டையூர் திரு. முத்துவீரப்ப தேவர் திருவளர் செல்வி கருப்பாயம்மாளுக்கும் 2. டையூர் முத்துக்கருப்ப தேவர் திருவளர் செல்வன் சங்கரபாண்டியனுக்கும் டையூர் திரு. திருவானைத்தேவர் திருவளர் செல்வி அய்யம்மாளுக்கும் நாளது விபவ-ஹூ ஆவணித் திங்கள் 26-ம் நாள் பார்ப்பனப் புரோகிதமின்றி டை குலப் பெரியாராகிய திரு. முத்தையத் தேவர் அவர்களைக்கொண்டு தமிழ் முறையில் திருமணங்கள் வெகு விமரிசையாய் நடத்தப் பெற்றன. கிருஷ்ண பிள்ளை.

மணச்சநல்லூர். திருச்சி ஜில்லா மணச்சநல்லூர் திருவாளர் முத்துசாமி பிள்ளை என்ற குஞ்சு பிள்ளை அவர்களது பௌத்திரரும், அய்யா பிள்ளை என்கிற பிச்சு பிள்ளை அவர்களது குமாரருமாகிய ஸ்ரீமான் திருநாவுக்கரசு பிள்ளைக்கும் தஞ்சை ஜில்லா ஆண்டிராமபுரம் திருவாளர் எ. எஸ். அய்யா பிள்ளை அவர்களது குமாரத்தி சௌபாக்கியவதி கமலாம்பாளுக்கும் 9-9-28 ஞாயிறன்று திருமணம் இனிது நடைபெற்று ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

ஆண்டிராமபுரம், கும்பகோணம்தாலூகா ஆண்டிராமபுரம் எ. எஸ். அப்பா பிள்ளை குமாரத்தி சௌபாக்கியவதி கமலாம்பாளுக்கும் திருச்சி தாலூகாமணச்சநல்லூர் அய்யா பிள்ளை மகன் திரு. திருநாவுக்கரசுபிள்ளைக்கும் பார்ப்பனப் புரோகித மில்லாமல் 9-10-28 காலையில் திருமணம் செய்தார்கள்.

எ. கலியாணசுந்தரம்.

பணகுடி. பணகுடி உயர்திருவாளர் சா. சுடலை முத்து மூப்பனார் அவர்கள் புதல்வன் நிறைநாட் செல்வன் மீனாக்ஷி நாதனுக்கும் கனம் உ. மாடமுத்து மூப்பனார் அவர்கள் புதல்வி சங்காவடிவம்மாளுக்கும் நிகழும் மெய்கண்டான் ஆண்டு ஆவணித்திங்கள் 25-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பார்ப்பனரை அறவே ஒழித்து மணமகனின் தகப்பனாராலேயே குரு சுயமரியாதைத் திருமணம் அதிவிமரிசையாய் நடத்தப்பெற்றது. ஒரு நிருபர்.

மாயவரம் டவுன். ஸ்ரீமான் எதிராஜுலு தாஸ் என்பவர் தமது குமாரர் சுந்திர ராஜுலு நாயுடுக்கு பார்ப்பனப்புரோகித மின்றி சுயமரியாதை முறையில் திருமணம் செய்து வைத்தார். ஒரு நிருபர்.

### சுயமரியாதை உதயம்

சாக்கோட்டை,

பிரபல மிராசுதாரரும் தனவந்தரும் பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பரும் சுமார் 85 வயதுள்ள பெரியவருமான ஸ்ரீமான் பெ. றெங்கசாமி நாயக்கர் அவர்கள் தம் சொந்த பொருளைக் கொண்டு சத்திரம் கட்டி அதில் ருமா நுஜக்கூடம் அமைத்து டை மடத்துக்கு இதுவரையிலும் ஆரியர்களைக்கொண்டு பூஜை நைவேத்யம் நடத்தி வந்தார் இப்பொழுது அவர்களை விலக்கி விட்டு தங்கள் சொந்தத்தில் பூஜை நைவேத்தியம் செய்து வருகிறார்கள். சுயமரியாதை வாழ்க.

கணபதிநாயக்கர்.

### பார்ப்பனீயமற்ற திதிகள்

மாயவரம். மாயவரம் டவுன் புதுத் தெருவிலிருக்கும் ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணசாமி நாயுடு தம் தந்தையின் திதியை இவ் வருடம் எவ்விதப் புரோகிதமுமின்றி பந்து மித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு முடிவு செய்தார். ஒரு நிருபர்.


தெம்மாபட்டு. இராமனுதபுரம்ஜில்லா திருப்பத்தூர் தாலூக்கா தெம்மாபட்டு கிராமத்திலிருக்கும் திருவாளர் மரு. தயி. மருதப்ப பிள்ளை அவர்கள் தம் பிதா அவர்களின் முதலாவது ஸ்ரார்த்தத்தை பார்ப்பனரில்லாமல் சுயமரியாதை முறையில் மலாய் நாட்டின் தலைநகரமான கோலாலம்பூர் அம்பாங்ஸ் வீதியில் 82-ம் நெ. கிருகத்தில் நடத்தினர்.

கருப்பய்யா பிள்ளை.

மலாக்கா. குழ. ராம. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் தம் பிதா இறந்த 17-வது ஆண்டு விழாவை பிராமணப் பிடுங்கல் புரோகிதத்தை அறவே யொழித்து பல அன்பர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து சிறப்புற நடத்தி அகமகிழ்ந்தார். 16-வது ஆண்டு விழாவும் இவ்வூரில் இதுபோன்றே நடத்தினர்.

## மறுப்பு.

"திராவிடன்" "ஜஸ்டிஸ்" பத்திரிக்கைகளில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் தற்கால ராஜீய நிலைமையைப்பற்றி பேசியதாகக் காணப்படும் அறிக்கை அவ்வளவும் சரியான அறிக்கையல்ல என்பதாக திரு. நாயக்கர் தெரிவித்துக்கொள்கிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஞு புரட்டாசி மீ 1-வ

# ராமனாதபுரம் ஜில்லாபோர்டு.

ராமனாதபுரம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டாயிருந்த ராமனாதபுரம் ராஜா அவர்கள் காலமானதின் மூலம் இப்போது அந்தபிரசிடெண்ட் ஸ்தானம் காலியாக இருந்துவருகின்றது, சர்க்காரார் அந்த ஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்கு இதுவரை யாதொரு முடிவும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் அந்த ஸ்தானத்தை தேர்தலுக்கு (எலக்ஷனுக்கு) விட்டுவிடலாமா அல்லது தாங்களே ஒருவரை பிரசிடெண்டாக நியமனம் (நாமிநேஷன்) செய்து விடலாமா என்று யோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. தற்கால நிலைமையில் அதுவும் ராமனாதபுரம் ஜில்லாவைப் பொருத்தவரை அந்த ஸ்தானத்தை எலக்ஷனில் விடுவதைவிட நாமிநேஷனில் தக்க ஒருவரை நியமனம் செய்வதே யோக்கியமும் அறிவுடைமையுமான காரியமென்று சர்க்காருக்கு யோசனை கூறுவோம். மதுரையில் சிலபாகம், திருநெல்வேலி, இராமனாதபுரம் ஆகிய ஜில்லாக்களிலும் ஜாதிக் கர்வமும் ஜாதிக் கொடுமையும் தலைசிறந்து விளங்குவது யாவரும் அறிந்த தொன்றாகும். உதாரணமாகப் பார்ப்பனர்களின் கொடுமையோ சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. அதற்கடுத்ததான தெற்கத்திய சைவ வேளாள சமூகத்தாரின் கொடுமையோ பார்ப்பனரல்லாதார் சமூகமே வெட்கப்படத் தக்கதாகும். இவ்விரு சமூகக் கொடுமைகளுக்குமத்தியில் அங்குள்ள மற்ற வகுப்பார்கள் படும் கஷ்டம் நினைக்கமுடியாததென்றே சொல்லுவோம்.

சாதாரணமாக சென்னை மாகாணத்தில் வேறு எங்குமே இல்லாத கொடுமைகள் பல மேல்கண்ட ஜில்லாக்களில் தாண்டவமாடிக்கொண்டு வருகின்றன.

திருச்செந்தூரில் இருக்கின்ற ஒரு சைவக் கோவிலில் வைசியர்கள் என்கின்ற வாணியச் செட்டியார் சகோதரர்களுக்கு உள்ளே செல்ல உரிமை இல்லை. அதுபோலவே மதுரை, ராமேஸ்வரம் முதலிய அனேக கோவில்களில் க்ஷத்திரியர்கள் என்கின்ற நாடார் சகோதரர்கள் பிரவேசிக்க உரிமை இல்லை. ஆனால் பக்கத்து ஊர்களாகிய பழனி முதலிய இடங்களில் கோவிலுக்குள் செல்ல அவர்களுக்கு உரிமை உண்டு.

இதுமாத்திரமல்ல. இச் சில்லாக்களில் உள்ள அனேக தெருக்களில் நடக்கக் கூட சில ஜனங்களுக்கு உரிமை தடுக்கப்பட்டிருக்கின்றது. ஏதோ இரண்டொரு பார்ப்பனரோ சைவ வேளாளரோ சில நாடார் சகோதரர்களிடமும் வாணியச் சகோதரர்களிடமும் மற்றும் சிலருடனும் அளவளாவுவதாலோ, குடித்தல், உண்ணல் வைத்துக் கொண்டிருப்பதாலோ இக்கொடுமைகள் மறைந்துபோனதாகச் சொல்லிவிட முடியாதென்றே சொல்லுவோம். வாணியச் சகோதரர்களுக்கும் நாடார் சகோதரர்களுக்கும் இக்கோவில் பிரவேசமும் தெருப் பிரவேசமும் கிடைத்து விட்டதினால் அவர்களுக்கு ஏதாவது பெரிய ஆதாயம் கிடைக்கும் என்பதாகக் கருதியோ அல்லது அவர்கள் இதை லக்ஷியம் செய்கின்றார்கள் என்றோ நாம் இதை இங்கு குறிப்பிடவில்லை.

மற்றபடி ஒரு பொது ஸ்தலமான அந்நாட்டு மக்களுக்கே அதுவும் அறிவு, ஆற்றல், ஒழுக்கம், செல்வம், செல்வாக்கு, பரோபகாரம் முதலிய உயர் குணங்கள் ஒருங்கே அமையப்பெற்ற சகோதரர்களை மனித உரிமைக்கு அருகதை அற்றவர்கள் என்று சொல்வது எவ்வளவு கொடுமையானதாகவும், சகிக்க முடியாத இழிவை உண்டாக்குவதாகவும் இருக்கின்றதென்பதைக் காட்டவே இதைக் குறிப்பிடுகின்றோம்.

அன்றியும், இக்கொடுமைகள் கடவுளின் பேரால், மதத்தின் பேரால், தர்ம சாஸ்திரத்தின் பேரால் செய்யப்பட்டு வருவதுடன் அரசாங்க ஆட்சியின் பேராலும் சட்டங்களின் பேராலும் கோர்ட்டு தீர்ப்புகளின் பேராலும் நிலை நிறுத்தப்படுவது மானால் இனி வேறு எந்த வழியில் இதிலிருந்து விலக முடியும் என்பதுதான் நமது கேள்வி.

இச்சமூகமக்களில் ஏதோசில பேர் அறியாமையாலோ, அயோக்கியத்தனத்தாலோ அல்லது தங்களுக்குள் உள்ள உள்மாச்சரியத்தாலோ சுயமரியாதையில் கவலையற்று உதைத்த காலுக்கு முத்தமிடுவதுபோல் இக்கொடுமைக்கும் இழிவுக்கும் அடிப்படையான கடவுளையும் மதத்தையும் சாஸ்திரத்தையும் கட்டிக்கொண்டு அழுவதுடன் அதைக் கற்பித்த பார்ப்பனர்களின் வாலைப் பிடித்து திரிவதுடன் இதைத்திருத்த முயலாத அரசியல் இயக்கத்துடனும் அரசாங்க முறையுடனும் ஒத்துழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆயினும் இனியாவது இவற்றை ஒழிக்க முற்பட வேண்டியதவசியமாகும்.

கொடுமைப் படுத்தப்பட்ட இச்சமூகத்தாருக்கு இதில் போதிய கவலை இன்னும் ஏற்படவில்லையே என்று யாராவது சொல்வதானாலும் அதை ஒருசாக்காகவைத்துகொள்ளாமல் பொதுநலத்தை உத்தேசித்து நாட்டின்பொது சுயமரியாதையில் கவலையுள்ள மற்றவர்களாவது நாட்டின்க்ஷேமத்தையும் மனித சமூகத்தின் பிறப்புரிமையையும் உத்தேசித்து வேண்டுவன செய்யவேண்டியதே முதற்கடமை என்போம். இதை உத்தேசித்தேதான் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் பதவியைத் தேர்தலில் விடாமல் நியமன மூலமாய் பூர்த்தி செய்ய வேண்டுமென்கின்றோம். ஏனெனில் தேர்தல் மூலமாய் பூர்த்தி செய்வதானால் இக் கொடுமைகளை ஒழிக்கும் மனப்பான்மையும் சந்தர்ப்பமும் உள்ளவர்களுக்கு அந்த ஸ்தானம் கிடைக்க முடியாது. நியமனம் செய்வதானால் மாத்திரம்தான் இதுசமயம் சர்க்கார்தேடிப்பார்த்து அதற்குஏற்றஒருவரை நியமிக்கக் கூடும்.

கொடுமைப் படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும விடுதலை பெற்று சமத்துவமடைய வேண்டுமானால் அச்சமூகத்தாருக்கு அதிகாரமும் பதவியும் வழங்கப்பட்டாலொழிய வேறு வழியில் சரிப்படுத்துவதென்பது சுலபமான காரியமல்ல. வெள்ளைக்காரர்களை "நீச்சர்கள்" என்றும், மகமதியர்களை 'மிலேச்சர்கள்' என்றும், கிறிஸ்தவர்களை 'இழிந்தவர்கள்' என்றும் இன்றைக்கும் மதஆதாரம் வைத்துக்கொண்டிருக்கும் இந்துக்கள் என்போர்களும் இந்துக்களில் உயர்ந்தஜாதியார் என்போர்களும் அந்த எண்ணத்தை அடியோடு மறந்துவிட்டு இன்றையதினம் அவர்களுக்குள் சமத்துவம் பொருந்தியவர்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் தயவையும் எதிர்பார்த்துக் கொண்டு திரிவதற்கு காரணம் அச்சகோதரர்களுக்கு அதிகாரமும் பதவியும் கிடைத்ததின் பயனா அல்லவா என்று கேட்கின்றோம். அதிகாரத்தையும் பதவியையும் உத்தியோகத்தையும கண்டால் சாமியும் மதமும் சாஸ்திரமும் இடம் கொடுத்து விட்டு ஒதுங்கி நிற்பதை நாம் தினமும் அனுபவத்தில் பார்க்கின்றோம்.

பொதுவாக இந்நாட்டில் பார்ப்பனரல்லாதார் ஒரு 20 வருஷத்திற்கு முன் இருந்ததைவிட இப்போது சற்று உணர்வும் சுயமரியாதை உணர்ச்சியும் பெற்றிருப்பதற்குக் காரணம் சிறிதாவது அதிகாரமும் பதவியும் கிடைத்ததன் பயனா அல்லவா என்று கேட்கின்றோம். அதுபோலவே இப்போதும் எந்தெந்த சமூகம் பிறரால் கொடுமைப்படுத்தப்படுகின்றது என்று கருதுகின்றோமோ அந்தச் சமூகங்களுக்கு அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் தாராளமாய் கிடைக்கும்படி செய்துவிட்டால் அச்சமூகங்கள் தாமாகவே விடுதலை அடைந்து சமத்துவமடைந்து விடும் என்பது நமது துணிபு.

இதற்கு உதாரணமாக, இந்நாட்டில்பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட ஆதிக்கங்கள் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் உள்ள ஆதாரத்தின் பேரால் என்று சொல்லுவதானாலும் இந்தவிழிப்புக்காலத்திலும் அதை அசைக்க முடியாமல் செய்து வந்தது அப்பார்ப்பனர் கைப்பற்றிக் கொண்ட அதிகாரங்களாலும் பதவிகளாலும் உத்தியோகங்களாலுமே தவிர வேறல்ல. ஆதலால் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் அச்சமூகங்களுக்கு அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் தாராளமாய் வழங்கிவிட வேண்டியது நேர்மையான சர்க்காரின் முக்கிய கடமையாகும். அப்படிக்கில்லாமல் "இந்தி

யாவுக்கு நாங்கள்தான் தர்ம கர்த்தாக்கள், இந்தியாவை காக்க எங்களைக் கடவுள் அனுப்பினர். இங்கு உயர்வு தாழ்வு கொடுமைகள் அதிகம். அதை நாங்கள்தான் கவனித்து சமன் செய்து ஆள முடியும்" என்று வாயில் மாத்திரம் சொல்லிக்கொண்டு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது கவனிக்காமல் அச்சமூகங்களை அன்று பார்த்த காட்சிக்கு அழிவில்லாமல் வைத்திருப்பதானால் அதை பார்ப்பன சூழ்ச்சிபோல் மற்றொரு வெள்ளைக்கார சூழ்ச்சியோ அல்லது அரசாங்க சூழ்ச்சியோ என்றுதான் சந்தேகப்பட வேண்டுமே ஒழிய மற்றபடி வார்த்தைகளில் நாணய முடையவர்கள் என்று சொல்லிவிட முடியாது.

எனவே, அரசாங்கத்தார் இத்தத்துவங்களை நன்றாய் கவனித்து தெற்கு ஜில்லாக்களில் உள்ள ஜாதிக் கொடுமையையும் ஜாதி அகம்பாவத்தையும் ஒழிக்க தைரியமாய் முன்வந்து வெகு காலமாய் கொடுமைப் படுத்தப்பட்ட சமூகத்தினர்களுக்கு தக்க அதிகாரமும் பதவியும் உத்தியோகமும் கொடுத்து ஆதரித்து அவர்களுக்கு நியாயமான செல்வாக்குண்டாக்கி அவர்களை கொடுமைப்படுத்தப்படுவதிலிருந்து மீளச்செய்வார்களாக.

நிற்க, சென்றவாரம் சென்னையில் கவர்னர் துரையவர்களையும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா மந்திரியவர்களையும் இது சம்மந்தமாகவே நாடார் சமூகப் பிரமுகர்கள் ஆனவது திருவாளர்கள் நாடார் மகாஜன சபைத் தலைவர் வி. கனகசபை நாடார், உபதலைவர் செந்தில்குமார நாடார், காரியதரிசி பெரியதம்பி நாடார், கவுன்சிலர் புன்னையப்ப நாடார், இராமசாமி நாடார், சிதம்பர நாடார், வக்கீல் நடராஜன் முதலிய பல தக்க கனவான்கள் பேட்டிகண்டு பேசியதாகவும் தெரிய வருகின்றது. ஆகையால் இது விஷயத்தை சர்க்கார் அலக்ஷியமாகக்கருதி விடாமல் வினயத்துடன் கவனித்து அச்சமூகப் பிரமுகர்களில் ஒருவரையே அந்த ஸ்தானத்திற்கு நியமிக்க வேண்டுமென்று யோசனை சொல்லுகின்றோம்.

தக்க கனவான் கிடைக்கவில்லை என்று சர்க்கார் சாக்கு சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாதென்பதையும் எச்சரிக்கை செய்கின்றோம். ஏனெனில் சட்டசபை அங்கத்தினர் பதவிக்கும் ஜில்லா போர்டு மெம்பர் பதவிக்கும், சேர்மென் பதவிக்கும், மற்றும் உத்தியோக பதவிக்கும், அதிகார உத்தியோக பதவிக்கும் அச்சமூகத்தில் தக்க கனவான்கள் இருக்கும்போதும் வருஷம் ஐம்பதினாயிரம் ரூபா லக்ஷம் ரூபா வரும்படியுள்ள பெரிய எஸ்டேட்டுகளையும் வியாபாரங்களையும் சொந்தமாய் நிர்வகித்து நடத்தக் கூடியவர்களும் இருக்கும்போதும் இந்தவேலைக்கு மாத்திரம் ஆள் கிடைக்கவில்லை என்றால் அரசாங்கத்தின் நாணயத்தில் யாருக்கும் நம்பிக்கை இருக்காதென்றே சொல்லுவோம்.

ஆகையால் கவர்னர் துரையவர்களும ஸ்தல ஸ்தாபன மந்திரியவர்களும் தங்களின் யோக்யதையை காட்டிக் கொள்ள நேர்ந்த தக்க சமயத்தை இழந்துவிட மாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

## பழிவாங்கும் குணம்.

திருச்சி ஜில்லா நியாயாதிபதியவர்கள் திரு. ஞானப்பிரகாசம் என்கின்ற ஒரு தொழிலாளருக்கு 10 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்ததாக தெரியவருகின்றது.

இந்த வழக்கில் நியாயம் வழங்கப்பட்டதா அல்லது பழிவாங்கும் பேய்த்தன்மை நியாயம் வழங்கப்பட்டதா என்பது நமக்கு விளங்கவில்லை.

என்ன சமாதானம் சொன்னபோதிலும் இத்தீர்ப்பு எழுதிய நியாயாதிபதி மனிதத்தன்மையுடன் நடந்துக்கொண்டிருக்கிறாரா என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்து கொள்ளவேண்டும்.

இவ்வேலை நிறுத்தத்தில் ஏற்பட்ட சம்பவங்களின் பலனாக சற்றும் ஈவு இரக்கமற்று பழிவாங்கும் தன்மையோடு வழக்குகள் ஜோடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் விஷயங்கள் யாவருக்கும் வெட்டவெளிச்சமாய் தெரிந்திருக்கும்.

நியாயாதிபதிகள் என்பவர்கள் தக்களுக்கு நியமமாய் இருக்கவேண்டிய மனிதத்தன்மையை மறைத்துவிட்டு ஏதோ சிலசுயநலப்பத்திரிகைக்காரர்கள் சுமத்திய அபிப்பிராயப் பழியையும் சில சுயநல அதிகாரிகள் ஜோடித்த விஷயங்களையும் ஆதாரமாய்க்கொண்டு இம்மாதிரி நடப்பதென்றால் பிறகு வாயில்லா பூச்சிகளுக்கு எங்குதான் விடுதலையிருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை.

அப்பீலைகள் ஏகோபித்து எதிரி குற்றவாளியல்ல என்று சொல்லியும் தண்டித்திருப்பதாய் தெரிகின்றது.

சட்டத்திற்கும் நீதிக்கும் பொறுப்பானவர்கள் இதற்கு என்னபரிகாரம் செய்வார்களோ தெரியவில்லை.

## ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா வோகளி ஆரியா.

வீரர் திரு. ஆரியா அவர்களின் வாழ்க்கைத்துணை நல்லார் (பார்யை) ஆகிய ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா வோகளி ஆரியா M. A. B. D. M. D. சர்ஜன் அன் பிசிஷன் அவர்கள் குழந்தை வைத்திய விஷயத்திலும் ஸ்திரீகள் வைத்திய விஷயத்திலும் சிறப்பாக மருத்துவ விஷயத்திலும் தேர்ச்சிபெற மேல்நாடு சென்று ஜர்மனி முதலிய இடங்களில் உள்ள உயர்தர வைத்திய காலேஜுகளில் படித்து டாக்டர் பட்டம் பெற்று இந்தியாவுக்கு இரண்டு மாதத்திற்கு முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் இது சமயம் அரசாங்க உத்தியோகம் பெற விரும்பியவர்களானால், தக்க பதவியும் உத்தியோகமும் கிடைக்கக்கூடுமானாலும், தேசத்திற்கும் ஏழை மக்களுக்கும் தொண்டு செய்யவேண்டுமென்கின்ற ஆவலின்பேரில் தனியே சொந்தத்தில ஒருவைத்தியசாலை ஏற்படுத்தி இருப்பதுடன் யாவருக்கும் வைத்திய உதவி செய்யவும் தயாராயிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட தயாள குணமும் தாராள நோக்கமும் உள்ள அம்மையார் அவர்களை நாம் மனமாரப் பாராட்டுவதுடன் அவர்கள் எடுத்த காரியம் சித்திபெற்று யாவருக்கும் பயன்படவேண்டுமென்று மனதார ஆசைப்படுகிறோம்.

## ஈரோடு முனிசிபல் தேர்தல்,

ஈரோடு முனிசிபாலிட்டியின் நான்கு வார்டுகளுக்கும் இம்மாதக்கடைசியில் தேர்தல்கள் நடக்கப்போகின்றன. அவைகளுக்கு கோட்டை வார்டுக்கு ஓட்டுக்கார முத்து என்கிற திரு இ. ஒ. சி. முத்துசாமிக்கவுண்டரும், ஸ்டேஷன் வார்டுக்கு திரு. எம். சிக்கையநாயக்கரும், அக்கிரா வார்டுக்கு திரு பி. வி. என். சி. ரங்கராஜுசெட்டியாரும், கருங்கல் பாளையம் வார்டுக்கு திரு கே. எம். ஸ்ரீனிவாசம் பிள்ளையும் முக்கிய அபேட்சகர்களாக நிற்க முன்வந்திருக்கின்றார்கள்.

கெட்டுப்போன முனிசிபாலிட்டி இப்போது சிறிது தலையெடுக்க ஆரம்பித்திருப்பதால் கக்ஷிப் பிரதிகக்ஷிகளை கவனியாமல் ஓட்டர்கள் தங்கள் கடமையைச் செய்து, மறுபடியும் கக்ஷியுண்டாக்கி கொள்ளை அடிப்பவர்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்க எதிர் பார்க்கின்றோம்.

## "விஸ்வநேசன்,"

நாம் முன் குறிப்பிட்டபடியே இவ்வாரம் "விஸ்வநேசன்" (வாரப்பதிப்பு) பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம் அதில் அதன் நோக்கமும் கொள்கையும் ஒருவாறு நன்றாகவும் விளக்கமாகவும் விளக்கப்பட்டிருக்கின்றது, சுருக்கமாகச் சொல்லுமிடத்து அது ஒரு தைரியமும் உறமும் பெற்ற சீர்திருத்தப்பத்திரிகையாக மிளிரும் என்பதே நமது நம்பிக்கை. எனவே தமிழ்மக்கள் யாவரும் சிறப்பாக விஸ்வகுல மக்கள் என்போர்கள் யாவரும் அதை ஆதரிக்க கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்றே சொல்லுவோம்.

அதன் வருடசந்தா ரூ 3—0—0

விலாசம்:-

மானேஜர். "விஸ்வநேசன்" ஆபீசு,
நெம்பர் 1, பிராடி வீதி, ஈரோடு.

## 'ஆனந்த விகடன்.'

ஆநந்த விகடன் என்னும் தமிழ் மாத சஞ்சிகை ஒன்று வரப்பெற்றோம். அது, படித்து முடித்தவுடனே மறந்துபோகக்கூடியதொரு கொள்கையுமில்லாத--வெறும் விகடத்துணுக்குகளே நிறைந்த மற்ற-சஞ்சிகைகளைப்போலில்லாமல், விவசாயம், சுகாதாரம், கைத்தொழில், கல்வி, சமூகமுன்னேற்றம் ஆகியவைகளைக் குறிக்கொண்ட கட்டுரைகளும், விகடங்களும், விகடங்களுக்குத்தக்க சிறு சிறு சித்திரங்களும் கொண்டதாய், படிக்கப் படிக்க இன்பந் தரத்தக்கதாய், விளம்பரங்கள் நீங்கலாக ஏறக்குறைய 50 பக்கங்கள் கொண்டதாய், புத்தக ரூபமாய் இருக்கிறது. வருட சந்தா உள்நாட்டுக்கு ரூ. 1-0-0 ஆகவும் வெளி நாடுகளுக்கு ரூ. 1-4-0 ஆகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

வேண்டுவோர்:—" ஆனந்த விகடன்" ஆபீஸ், 244 தங்கசாலை வீதி, சென்னை" என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## என், எஸ். சர்மா அண்டு கம்பெனி

மதராசில் எர்ரபாலு செட்டி வீதியில் 23 ஆம் நெம்பர் கட்டிடத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திரு என் எஸ் சர்மா அண்டு கம்பெனியார் தாம் தயாரித்துள்ள சில பிளாக்கு (சித்திரங்)களின் உருவங்களடங்கிய சிறு ஜாபிதாவின் பிரதியொன்றை எமது பார்வைக்கு அனுப்பியுள்ளார். அதில் காட்டியுள்ள லைன்பிளாக், கலர் பிளாக், ஆப்டோன் பிளாக் ஆகிய அனைத்தும் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கின்றன. அவர் குறிக்கும் கூலி விகிதமும் மிகவும் குறைந்ததாகவே காணப்படுகின்றன. எனவே சித்திர ப்ளாக்குகள் வேண்டியவர்கள் ஷை கம்பெனியாருக்கு ஆர்டர் கொடுத்து அவரது முயற்சியை ஆதரிக்கவேண்டுமென்று விரும்புகிறோம். மற்ற விபரம் அறியவேண்டுவோர் ஷை கம்பெனியாருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

## ஸர் அண்ணாமலை சர்வ கலாசாலை, தனிக் கமிட்டி மெம்பர்கள்.

ஸ்ரீமான்களான பி. சுப்பராயன், ஸ்மித்திரா மூண்ணி மேனன், எஸ். சத்திய மூர்த்தி, பி. வி. வெங்கிடபதி ராஜு, டி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார், பி. முனுசாமி நாயுடு, முருகப்ப செட்டியார், பி. டி. ராஜன், டி. எம். நாராயணசாமி பிள்ளை, எஸ். அற்புதசாமி உடையார், ஷம்ஜுட்டைட், வி. வி. அனந்த கிருஷ்ணய்யர். பஷீர் அகமது, வி. ஐ. முனுசாமி பிள்ளை, எஸ். குமாரசாமி ரெட்டியார், சௌந்தரபாண்டிய நாடார், எஸ். என். தனராஜா பானேஜிராவ், ஸ்வாமி சகஜானந்தம், ஆகிய பதினைவர் ஸர். அண்ணாமலை சர்வ கலாசாலையின் தனிக்கமிட்டி மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சைமன் கமிஷன் உடனிருப்புக் கமிட்டி மெம்பர்கள்

சென்னை சட்டசபை கமிஷன் உடனிருப்புக்கமிட்டிக்கு ஸ்ரீமான்களான, திவான்பகதூர் எம். குமாரசாமி ரெட்டியார், ஸர். ஏ. பி. பத்ரோ, குமார ராஜா வெங்கிட்டகிரி, டானியல்தாமஸ் நாடார், பி. சிவராவ், என். சிவராஜ், கான்பகதூர் கலிபுல்லாசாகிப் ஆகிய எழுவரும் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

## கவர்னருடன் பேட்டி

### நாடார்களும், ஜில்லா போர்டு பிரசிடேண்ட் பதவியும்.

6—9—28-ல் சென்னை கவர்னரை நாடார்களுடைய பிரதிநிதிக் கூட்டமொன்று பேட்டி கண்டு ராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் பதவியைப் பெறுவதற்கு நாடார்களுக்குள்ள உரிமைகளை எடுத்துரைத்தது. கவர்னர் பொறுமையுடன் இவர்கள் கூறியதைக் காது கொடுத்துக் கேட்டார்.

கா. கு. மித்திரன்.

## சர்வகட்சி மகா நாட்டின் வண்டவாளம்.

### 8 கோடி முஸ்லீம்களுக்காக மௌலானா சௌகத் அலி சொல்லுவது.

'சர்வகட்சி மகாநாட்டில் முஸ்லீம்கள் நடத்தப்பட்ட விதமும், அங்கு நடந்த நாடகமும் நான் பிரிட்டிஷாரின்கீழ் உத்தியோகம் செய்துவந்து வேட்டையாடுவதற்கு 30, 40 வேட்டை நாய்களை வைத்துக் கொண்டிருந்த காலத்தையே நினைப்பூட்டுகிற தென்ற விஷயத்தை அதிக வெறுப்புடனும் வெட்கத்துடனும் சொல்லவேண்டியதாக இருக்கிறது. என்னுடைய வேட்டை நாய்கள் ஒரு நரியையோ, குள்ளநரியையோ நடத்தியது போலவே முஸ்லீம்களும் சர்வகட்சி மகாநாட்டில் நடத்தப்பட்டனர்.'

### 6 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, திரு. எம். சி. ராஜா சொல்லுவது.

"டாக்டர் அன்சாரி வருந்தத்தக்க பட்சாபாதத்தையும், திறமையின்மையையும் காண்பித்தார் என நான் சொல்லவேண்டியே நேருகிறது. அவர் தலைவர்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவரது இடப்பக்கத்தில் பண்டித மோதிலால் நேருவும், வலப்பக்கத்தில் பண்டித மதன்மோஹன மாளவியாவும், பின்னே நேராக லாலா லஜபதிராயும் உட்கார்ந்திருந்ததால் இந்த மூவரே உண்மையில் மகாநாட்டுத் தலைமை வகித்தனரென்பது நிச்சயம்.

திரு எம் சி. ராஜா அவர்கள் தாம் விடுத்த அறிக்கையொன்றில், தம் வகுப்பாருக்கும் சுயராஜ்யம்பெற வேண்டுமென்ற எண்ணந்தான் என்றும் ஆனால்சுயராஜ்யத்தில் தம் வகுப்பார் நிலை எப்படியிருக்குமென்ற உறுதி தெரிந்துகொள்ளாமல், இருட்டில் குதிக்க முடியாதென்றும் எடுத்துக் கூறியிருக்கின்றார், அம்மட்டோ! காங்கிரசினிடத்தில் தம்வகுப்பாருக்குச் சிறிதளவுகூட நம்பிக்கையில்லையென்றும் அறிவுறுத்தியிருக்கின்றார்.

மற்றபடி பார்ப்பனரல்லாதார் இயக்கம் சொல்வதைப் பற்றியும்சுயமரியாதை இயக்கம் சொல்வதைப் பற்றியும் இங்கு நாம் விரிக்க வேண்டியதில்லை.

## ஆப்கன் சீர்திருத்தங்கள், வைதீகர்களின் எதிர்ப்பு,

### பலர் கைதியாயினர்.

பெஷாவர், செப்டம்பர், 13

காலஞ்சென்ற ஆப்கன் அமீர் ஹபிபுல்லா கான் காலத்தில் மதகுருவாயிருந்த சாகர் பாக் என்னுமிடத்தைச் சேர்ந்த 'பீர்' ஹசரத்சாகிப் அவர்களும் மற்றும் பலரும் ஆப்கன் எல்லைப்புறத்தில் கைது செய்யப்பட்டு காபூலுக்கு கொண்டு போகப்பட்டதாயும், அவர், அரசர் அமானுல்லாகான் ஆப்கானிஸ்தானத்தில் கோஷா முறையை ஒழித்தல், பெண்களுக்கு கட்டாயக்கல்வி போதிக்கும் முறையை யனுசரித்தல், முதலிய முக்கிய சீர்திருத்தங்களைச் செய்து வருவதை எதிர்த்து ஆக்ஷேபிப்பதன் பொருட்டு ஆப்கன் எல்லைப்புறத்திலுள்ள பாசினி என்னுமிடத்திற்குச் சென்றபோது கைது செய்யப்பட்டதாயும் அவரைப் பின்பற்றுபவர்கள் ஏராளமாயிருப்பதுடன் அவருக்கு ஆப்கானிஸ்தானத்தில் மிகுந்த செல்வாக்கிருப்பதாயும் சொல்லப்படுகின்றது.

"திராவிடன்"

## முதலாவது மதுரைஜில்லா பார்க்கவ குலமகாநாடு.

அன்புடையீர்! இம்மமாநாடு திண்டுக்கல் தாலூகா, தர்மத்துப்பட்டியிலுள்ள மகாநாட்டுக்கொட்டகையில் செப்டம்பர் 17, 18 (புரட்டாசி 2, 3௳. களில்) திங்கள் செவ்வாய் ஆகிய கிழமைகளில் நடைபெறும். மணம்பூண்டி ஸ்ரீ ஞானியார் ஆசிரம முதல்வர் உயர்திரு. ம. ரா. குமாரசாமி உடையார் முதல்நாளும், கும்பகோணம் உயர்திரு. ஆர் கந்தசாமி மூப்பனர் B. A. B. L. அவர்கள் இரண்டாம் நாளும் தலைமைவகிப்பார்கள். மகாநாட்டை ஈரோடு உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் திறந்துவைத்து சொற்பெருக்கிடுவர். பல அறிஞர்களால் அரியபொருள்கள்பற்றி சொற்பொழிவு செய்யப்பெறும். வெளிதாலூகா பிரதிநிதிகட்குமட்டும் சாப்பாட்டு வசதி செய்துகொடுக்கப்படும். இப்பெருங் கூட்டத்திற்கு அன்பர்கள் அனைவரும் போந்து இன்பந்துய்க்குமாறு வேண்டுகிறோம்.

உபசரணைக்கமிட்டியார்.

## சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.


## மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது, உத்திரவாதமுள்ளது,

கிரமமாக சாப்பிட்டுவந்தால் துரித ஸ்கலிதம், சொற்பன ஸ்கலிதம் முதலியன தீரும். நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்;

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—0—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆநந்தநிலயம், திருச்செங்கோடு.

8-ம் பக்கத் தொடர்ச்சி.

கோலமிட்டு, அலங்கரித்து, ஒரு கணத்தில் தம் கோர ரூபம் நீங்கி சௌந்தர்யவதிகளாய் வெளிவந்தனர். இதைக்கண்ட புண்டலீகர் இவர்களை பேய்களோ, தேவதைகளோ என எண்ணி ஆச்சரியமும் பயமும்கொண்டு, கடைசியாக ஒருவாறு பயந்தெளிந்து அம்மாதர்களிடம் அணுகி 'நீங்கள் யாவர்' என்றுகேட்க, அவர்களில் ஒருமாது 'அடா பாவி! நீ முற்பிறவிகளில் செய்த நல்வினைப் பயனே உன்னை இம்முனிவரிடம் கொண்டு வந்து விட்டது. அவரைக் கண்ட புண்ணியத்தால் எங்களையும் கண்டாய். இனி நீ எந்தப் பாவமும் தொடரப் பெறுதவனாய் பரிசுத்தனுக்க கடவை! நாங்கள் கங்கை, காளிந்தி, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் இந்த உருக் கொண்டு வந்திருக்கின்றோம். எங்களிடத்தில் மூழ்குவோருடைய பாவங்களையெல்லாம் நாங்கள் ஏற்று அதனுல் கோர ரூபங்கொண்டு, அந்த ரூபத்தை பரிசுத்த ஆத்மாவாகிய இந்த குக்குட முனிவருக்கு ஊழியம் செய்வதனுல் மாற்றி நல்ல ரூபம் கொண்டு போகிறோம். இவர் தமது தாய் தந்தையரை வழிபடுகிற புண்ணியமே எங்கள் பவத்தை போக்கிற்று' என்று சொல்லிச் சென்றுவிட்டனர்.

பின்பு புண்டலீகர் குக்குடரிடம் விடை பெற்றுக்கொண்டு தாய் தந்தையரைத் தேடினர். தேடிக் கண்டு அவர்களைத் தமது குதிரைமீதில் ஏற்றிக்கொண்டு, புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குவித்து, தம் வீடு வந்து தாமும் தம் மனைவியும் அத் தாய் தந்தையருக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்க பூர்வயுகத்தில் 'விருத்திரன்' என்பவன் தேவராஜனுகிய இந்திரனைக் கொல்ல நினைத்து பாதாளலோகத்தில் தவம் செய்துகொண்டிருந்தான். இதையறிந்த இந்திரன் பாதாள லோகம் சென்று தன் வஜ்ராயுதத்தால் அவன் தலையைச் சேதித்து வீழ்த்தினன். அப்பொழுது விருத்திரன் "தவஞ் செய்யும்போது தலையை அறுத்த பாவத்தால் நீ செங்கல்லாய் பூமியில் விழக்கடவை" என்றான்.

இந்திரன் செங்கல்லாய் விழு முன்னே திருமால் மகிழும்படி தோத்திரம் செய்ய, திருமால் மகிழ்ந்து "தேவராஜனே நான் புண்டலீகாஸ்ரமத்தில் வந்து செங்கல்லுருவாய்க் கிடக்கிற உன்மேல் அடிவைத்து உன்னைப் பூர்வ ரூபமாய்ச் செய்கிறேன், அஞ்சவேண்டாம்" என்றனர். அன்று முதல் இந்திரன் புண்டலீகர் வசிக்கும் திண்டீர வனத்தில் செங்கல்லுருவாய்க் கிடந்தான்.

இப்படியிருக்க திருமால், புண்டலீகர் தாய் தந்தையர் வழி பட்டுக் கொண்டிருக்கும் சமயம் அவருக்குப் பின்புறம் வந்து நின்றார். அப்போது திருமாலின் ஒளி புண்டலீகரின் தந்தையாரின் பாதத்தில் படவே புண்டலீகன் திரும்பிப் பார்த்து அருகிற்கிடந்த ஒரு செங்கல்லை எடுத்தெறிந்து "இதன்மீது சற்று நேரம் நில் என் வேலையை முடித்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு தாய் தந்தையருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு திருமாலிடம் வந்து வணங்கினன். திருமால் "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று புண்டரீகனைக் கேட்க, அவன் "தேவரீர் இந்த இடத்தை என் பெயர்ச் சார்பினுல் பண்டரிபுரமென்ற பெயருடையதாய்ச் செய்து இத்தலத்தில் எல்லாவற்றிலும் சிறந்த தீர்த்த மொன்றையுமுண்டாக்கி, அதில் மூழ்கி உன்னை வணங்குவோர் யாவரும் பாவ விமோசனம் அடைந்து பரிசுத்தராகும்படி இத்தலத்தில் தேவரீரும் பாண்டுரங்கன் என்னும் நாமத்துடன் நித்யவாசஞ்செய்ய வேண்டும்" என்று வேண்ட திருமாலும் அவ் வரத்தை யருளினர்.

திருமாலின் அடியில் செங்கல்லாகக் கிடந்த இந்திரன் தற்பொலி யடைந்து தேவ தச்சனை வரவழைத்து அத்தலத்தில் ஒரு அழகிய நகரமும் விமானமும் செய்யச் செய்து திருமாலை மகிழ்வித்தான். அந்நகரமே இப் பண்டரிபுரம். திருமாலே இப் பண்டரிநாதன்; சந்திரபாகை என்னும் நதியே இத்தீர்த்தம்—என்று சிவபெருமான் சொன்னாராம்.

மேல்கண்ட வரலாறுகளிலிருந்து, திண்டீர வனமென்ற ஒரு வனம் எப்படி லோகநாதமென்றும் பண்டரிபுரமென்றும் பேர் பெற்றது என்பதும் திருமால் பாண்டுரங்கன் என்று பேர் பெற்றனர் என்பதும் காணக்கிடக்கின்றதுடன் திருமால், தேவராஜனுகிய இந்திரன், இந்திராணி முதலிய நம் இந்து தெய்வங்களெனப் படுபவைகளின் யோக்யதையும் வெளியாகின்றது. "தேவர்களுக்கெல்லாம் தேவனுகிய இந்திர"னுடைய மனைவி இந்திராணி தன் கணவனை அலட்சியம் செய்து விட்டு திருமாலைக் காமிக்கிறாள். "லோக ரக்ஷகராகிய திருமாலும்" தமது மனைவி லக்ஷ்மியை அலட்சியம் செய்துவிட்டு பிறன் மனைவியாகிய இந்திராணியைத் தம் மடிமீது எடுத்து வைத்துக் கொள்கிறார். அவளுக்காக மாது வேடம் பூண்டு காமப் பித்தேறி அலைகிறார். அப்பித்தால் 28 அவதாரயுக காலம் இந்திராணியின் [illegible] நிற்கிறார். என்னே "பரம்பொருளாகிய திருமால்" "தேவராஜன் பத்தினி இந்திராணி" இவர்களின் ஒழுக்கம்!

கேவலம் ஒரு அசுரனைக் கொல்ல திருமால் ஆயிரம் வருடம் போர் செய்தும் வெல்ல முடியாமல் கடைசியாக சூழ்ச்சியாக [illegible] கொண்டார் என்றால் 'எல்லாம் வல்ல திருமாலின்' சக்தியும் கோமையும் என்னே!

ஆயிரம் வருடம் போர் செய்தும் தம்மால் வெல்ல முடியாத ஒருவருக்கு திருமால் வைகுண்ட பதவி அளித்தார் என்பது கொஞ்சமும் பொருந்தாது என்பதை நாம் வாசகர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

கங்கை, காளிந்தி, சரஸ்வதி ஆகிய நதிகளில் குளித்தவர்களுடைய பாவங்களை யெல்லாம் அந் நதிகள் ஏற்றுக் கொள்கின்றன வென்பதும் அப்படி குளித்து தம்மை புகழ்ந்தவர்களுக்கெல்லாம் திருமால் முத்தி அளித்தனர் என்பதும் உண்மையென்று நம்பினவர்கள், என்ன பாவம் செய்தாலும் கங்கையில் மூழ்கி திருமாலைப் புகழ்ந்து விட்டால் அப்பாவங்களெல்லாம் நாசமாகி முத்தியடைந்துவிடும் என்று மேலும் மேலும் அக்கிரமங்கள் செய்வார்களா மாட்டார்களா?

பிறகு, தேவராஜனுகிய இந்திரனுடைய யோக்கியதையைப் பாருங்கள், அவன், விருத்திரன் கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்துகொண்டிருக்கிறபோது அவனை வஜ்ராயுதத்தால் அடித்துக் கொல்கிறான். இப்படிப்பட்ட கொடும் பாதகன் திருமாலைப்புகழ்ந்து விருத்திரன் கொடுத்த சாபத்தைப் போக்கிக்கொள்கிறான்!

ஆச்சரியம்! பாவ மன்னிப்பு டிக்கட்டும் மோட்சலோக டிக்கட்டும் இவ் வித்துமதத்தில் கிடைப்பதுபோல வேறு எந்த மதத்திலும் இவ்வளவு சுலபமாகக் கிடைப்பதில்லை. செங்கல், நதி முதலியவைகள் மனிதர்களாகவும், மனிதர்கள், நதி, கல் முதலியவைகளாகவும் இவர் இடையே மாறுகின்றனர். இவைகளெல்லாம் ஆதாரமாகக் காட்டப்படும் இந்துமத கடவுள்கள், புராணங்கள் முதலியவைகளை யெல்லாம்—நம்பாவிட்டால் நாஸ்திகமாம்! மேற்கண்ட கதைகளை ஆதாரமாகக் கொண்ட பண்டரிபுரத்திற்குத்தான் நம் பாமர மக்கள்—படிப்பறிவில்லா மக்கள்—லக்ஷக் கணக்காக ஒவ்வொரு வருஷமும் பிச்சை யெடுத்துக் கொண்டாவது போய் விழுகிறார்கள். இப்படிப் போய்வருவதில் இவர்கள் செலவிடும் காலமும் பணமும் கணக்கிடப்பட முடியாது. அரிய காலத்தையும் பொருளையும் செலவிடுவதன்றி ஆண் பெண் என்ற வித்யாசமின்றி ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளலாகிய ஒழுக்கக் குறைவுகளுக்கும் உட்பட்டு, சிலர் [illegible] ஆகார மாறுதலினும் நோய்வாய்ப்பட்டு, வழியில் இடிபட்டு, நல்ல உணர்ச்சியுமற்று கோவிந்தா! கோவிந்தா! என்ற வாய் வார்த்தையோடு மார் வந்து சேருகிறார்கள்.

அந்தோ! இப்பண்டரிபுர யாத்திரைக்குச் செலவிடும் காலத்தையும் பணத்தையும் ஏழைமக்களின் அறிவு வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்குமான கல்விக்குச் செலவழித்தால் பண்டரிநாதன் நம் கண்ணைக் குத்திவிடுவானு? பகுத்தறிவைக்கொண்டு யோசித்துப் பாருங்கள்.

---

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1928-ஞு மி. வி. க. 904

1927-ஞு S. C. ந. 2252

சின்னம்மாள்—வாதி

செங்கோட கவுண்டன்—பிரதிவாதி

பிரதிவாதிக்கு வாதிவக்கில் கொடுத்த நோட்டீசு. டிஷ. டிஸ்பரில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஸ்தாவர சொத்துக்கள் ஜப்திவாதினை இன்ஜங்க்ஷனை மிஷ்காரிக்க 21-9-28-ம் தேதி டிஷ. கோர்ட்டில் வாய்தா போடப்பட்டிருக்கிற சங்கதி பிரதிவாதிக்கு இதனுல் தெரிவிக்கப்படுகிறது.

13—9—28 ஈரோடு. } R. வெங்கடாமய்யர் வாதி வக்கீல்

# மழையின் இரகசியம்.

## இன்னுமா இந்த சூழ்ச்சி?

(குமாரசாமி எழுதுவது.)

தென் திருவிதாங்கூரில், "திருநெறித் தொண்டர் குழாத்தினர்" என்ற ஒரு கூட்டத்தினர் 19—4—1104-ம் கொல்லமாண்டில் அதாவது சென்ற மாதம் 19-ம் தேதியன்று ஓர் வெளியீடு வெளியிட்டிருக்கின்றனர். அது நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அவ் வெளியீட்டின் சுருக்கத்தை முதலில் குறிப்பிட்டுவிட்டு பின்னர் அதற்குள்ளடங்கியுள்ள சூழ்ச்சியை வெளிப்படுத்துவோம்,

வெளியீட்டின் சுருக்கமாவது :—

"நம்மவருள் பலர் ஆலய வழிபாட்டை இகழ்ந்து இறைவனை மறந்திருப்பதால், மாதம் மும்மாரி பொழியும் நம் நாஞ்சி நாட்டில் ஆனி ஆடிச்சாரல் மழை பொய்த்துவிட்டது. அநேக நிலங்கள் காய்ந்து இளம் பயிர்கள் கருகிவிட்டன. உழவுக்குத்தண்ணீர் இன்றி உழவர்கள் வருந்துகின்றனர், மாடுகள் நோயால் மடிகின்றன, ஆகவே நாம் ஒன்று செய்யவேண்டும். அதாவது ஆவணி 25-ம் தேதிமுதல் 29-ம் தேதியாகிய அமாவாசை வரை நம்நாட்டிலுள்ள ஒவ்வொரு ஊர் அன்பர்களும் தேவஸ்தான அதிகாரிகளும் தர்ம கர்த்தாக்களும் அவரவர் ஊரிலிருக்கும் கோயில்களுக்குச் சென்று அர்ச்சனை, அபிஷேகம் முதலியன செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அருட் கடலாகிய இறைவனருளால் மழைபொழிந்து நாடு செழித்தோங்கும், இது உறுதி. இதை தேவஸ்தான கமீஷனர் திரு. ஓ. எஸ் ராயசாமி அய்யர் அவர்களும் அஸிஸ்டெண்ட் கமீஷனர் திரு. ரங்கநாத சாஸ்திரி அவர்களும் ஆமோதித்திருக்கின்றனர். இங்கனம்,

திருநெறித்தொண்டர் குழாத்தினர்
வடிவீஸ்வரம்"

-என்பது அதன் சுருக்கமாகும்,

முதலாவது, மேற்கண்ட வெளியீடு பிறந்த இடமோ பார்ப்பன ஆதிக்கம்மிகுந்த திருவிதாங்கூர் ராஜ்பத்திலுள்ளது. மேற்படி வெளியீட்டை ஆமோதிப்பவர்களோ தேவஸ்தான உத்திபோகத்திலுள்ள இரு அய்யர்களும் சாஸ்திரிகளும், ஆகவே இத்திருநெறித்தொண்டர் குழாத்தினர் ஒன்று வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லா கோயில் பார்ப்பனர்களாகவோ, அல்லது பார்ப்பன தாசர்களாகவோ, அல்லது பார்ப்பன சூழ்ச்சி அறியாத சாதுக்களாகவோதான் இருக்கவேண்டும். ஆகவே மேற்படி வெளியீடு வெளியிடப்பட்டதின் கருத்தை நாம் அதிகமாக விரிக்க வேண்டியதில்லை.

இரண்டாவதாக, மேற்படி திருநெறித்தொண்டர் குழாத்தினர் "மாதம் மும்மாரி பொழியும் நம நாட்டில்" என்கின்றனர்.

இப்பார்ப்பனர் வெளியீட்டிலும், இவர்களின் பழைய செல்லரித்த ஏடுகளிலும் காணப்படுவதைத் தவிர வேறு எந்த இடத்தில எந்த காலத்தில் மாதம் மூன்று மாரிவீதம் வருடத்தில் முப்பத்தாறு மாரி கணக்காகப் பொழிந்தது என்று கேட்கின்றோம்.

மூன்றாவதாக, "மழை பொய்த்ததற்குக் காரணம் கோவிலுக்குச் சென்று அடிக்கடி பூசைகள் செய்யாததுதான்" என்கின்றனர்.

பூசை செய்யாவிட்டால் மழை பொழியாதா? கோவிலோ, பூசையோ, ஜனவாசமோ, இல்லாத சமுத்திரங்களிலும் காடுகளிலும், கோவிலும் பூசையும் மலிந்த நாட்டில் பெய்யும் மழையைவிட பன்மடங்கு அதிகமான மழை கொட்டுகிறதே. அதற்கு என்ன காரணம்?

"திருநெறித்தொண்டர்கள்" எல்லோரும் சேர்ந்து சகாரா பாலைவனம் சென்று அங்கு கோவில் கட்டி "கருணைக்கடலாகிய கடவுளை" வழிபட்டு ஒருமழையாவது அங்கு வரவழைக்க முடியுமா? அல்லது இமயமலை சாரலுக்குச்சென்று மேற்படி கடவுளைத் துதித்து, அங்கு சதாபெய்துகொண்டிருக்கும் மழையை ஒரு நாளைக்காவது பெய்யாமல் நிறுத்த முடியுமா?

தவிர பல்லாண்டுகளுக்கு முன் கடவுள் என்பதைப்பற்றிய எண்ணமோ, மதம் என்பதைப்பற்றிய எண்ணமோ தோன்றுதகாலத்தில் பூமியில் மழை பெய்யவில்லையா? இந்தியாவில் அக்காலத்தில் நதிகளோ, ஆறுகளோ ஏரிகளோ இல்லையா?

இன்னும், மதம் என்பதையெல்லாம் ஒழித்து, 'கோவில் என்பதையெல்லாம் இடித்து, கடவுள்கள் என்பதையெல்லாம் உடைத்து, குருக்கள் என்பவர்களை யெல்லாம் மடித்து, 'நாஸ்திகக் குடி அரசு' நடத்திவரும் ருஷ்யா தேசத்தில் மழை பொழியவில்லையா?

நான்காவதாக, 'கடவுளுக்குப் பூசனை, அர்ச்சனை, ஆராதனை, அபிஷேகம் முதலியன செய்தால் மழை பெய்வது உறுதி (100 குண்டூசி பந்தயம)' என்கின்றனர்.

இதைப் படிக்கும்போதுதான் நமக்கு அடங்காச் சிரிப்பு வருகின்றது. மழை வரவழைப்பதாகச் சொல்லி, கல்வியறிவில்லாத-பகுத்தறிவில்லாத-மூடநம்பிக்கை கொண்ட ஏழை மக்களை ஏமாற்றி, அபிஷேகம், ஆராதனை முதலியன செய்யச் செய்து அதனால் வயிறு பிழைப்பதைவிட இத் திருநெறித் தொண்டர்களும் அவருடைய தந்திரத்தை ஆமோதிக்கும் தேவஸ்தான கமீஷனர்களான ரங்கநாத சாஸ்திரிகளும், ராமசாமி அய்யர்களும் வண்ணாமந்திரி கதையைப்போல திருவிதாங்கூர் ராஜாவுக்கு மந்திரிகளாய் அமர்ந்து கொண்டால், ராஜாவும் இவர்களது ஆலோசனையைக் கேட்டு, திருவிதாங்கூர் ராஜ்பத்திலுள்ள விவசாய சாதனங்களான ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் கிணறுகள் அணைக்கட்டுகள் முதலியவைகளை யெல்லாம் அழித்துத் தூர்த்துவிட்டு விவசாயவிர்த்தி லாக்காவிற்குச்செலவாகும்தொகையைக் கொண்டு ஊருக்கொரு கோயில் கட்டி ஒவ்வொரு கோயிலுக்கும் அவ்வவ்வூர்ப்பார்ப்பனர்களை அதிகாரிகளாக்கி அவர்களுக்கெல்லாம் நாடோறம் அறுசுவைஉண்டி அளித்து வந்தால் அந்நாடு முழுவதும் வேண்டியமழை வேண்டிய இடத்தில் வேண்டிய போது பொழியும்; ராஜ்பமும் ராஜாங்கமும் ஒரே வருஷத்தில் குபேராஜ்யத்தைப்போலாய்விடும். பலேயோசனை !

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டபோது அவர் அதற்கு ஒப்புக்கொண்டு தம்மாலான வகையிலெல்லாம் அவ் வியக்கத்திற்கு உதவியளிப்பதாக வாக்களித்தார். திரு செட்டியார் தம்மைக் குறித்து பிறர் என்ன சொல்லிக் கொள்ளுகின்றார்கள் என்பதைப்பொருட்படுத்தாது தம் மன சாட்சியின்படி நடப்பவர் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய மாசற்ற மனத்துடன் அறிவாற்றலும் பொருந்தியவர்களுள் நம் நாட்டிலிருக்கும் பெரியார்களில் திரு செட்டியார் முக்கியமானவர். நீங்கள் அவர் அந் நாட்டிலும் இந் நாட்டிலும் செய்துள்ள வேலைகளைப்புகழ்ந்து பாராட்டுவதைவிட அவருடைய அபிப்பிராயத்தை அறிந்து அதனைப் பின்பற்ற முயல்வதுதான் உசிதமாகும். இன்று திரு செட்டியாரைக் குறித்து சில வார்த்தைகள் சொல்ல இக் கூட்டத்தில் எனக்குச் சந்தர்ப்ப மளித்ததற்கு டாக்டர் நாயர் கல்விக் கழகத்தாருக்கு என் நன்றியறிதலையும் சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

பின்னர் திரு ஆரியா திரு ரங்கய்ய நாயுடு முதலியவர்கள் திரு செட்டியாரவர்களைப்பாராட்டி பேசினார்கள். பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

---

கடைசியாக "திருநெறித் தொண்டர் குழுவினரை" ஒன்று கேட்கின்றோம்.

அபிஷேகம் முதலியன செய்தால் மழை பெய்விப்பதாக எந்தச்சாமி, எப்பொழுது, யாரிடத்தில் சொல்லிற்று உலகங்களையெல்லாம் படைக்கவும மழை பெய்விக்கவும் சக்தியுள்ள சாமிக்கு தேங்காய் பழம் சோறு முதலியன படைத்துச் சாப்பிட்டுக் கொள்ள சக்தியில்லையா? பசியாத வரம் கொடுக்கும் சாமி மழை பெய்வதற்கு கூலி கேட்பானேன் ?

ஆகவே, "திருநெறித்தொண்டர்" குழாத்தினரே! தேவஸ்தான கமீஷன் சாஸ்திரிகளே! உங்கள்பண்டமாற்றுச்சாமிக்கு அதன் தாகர்களாகிய நீங்களே உங்கள் சொந்தச் செலவில் அபிஷேகம் முதலியன செய்து மழை வரவழைத்துக் கொள்ளுங்கள். அல்லது மழை வாமலே செய்து விடுங்கள். டும். ஏழைமக்கள் காசைப்பறிக்கச் சூழ்ச்சி செய்யவேண்டாம். இவ்விருபதாம் நூற்றாண்டில் உங்கள் சூழ்ச்சி பலிக்காது.

முடிவாக சொல்வதாவது, மேல் நாட்டு ஆராய்ச்சியானது, மழை பெய்யாவிட்டால் ஆகாயத்தில் ஏற்பட்ட இயற்கை குற்றங்களையும் கோளாறுகளையும் கண்டு பிடித்து அதற்கு வேண்டியதைச் செய்து மழைவரவழைக்க முயற்சிசெய்து வெற்றி பெற்றும் வருகின்றது. நமது நாட்டு ஆராய்ச்சியோ பார்ப்பனர் தின்று கொழுத்து வயிறு வெடிக்கச்செய்யும் வருணஜெபம், பூசை, உற்சவம், பூரிதக்ஷணையிலேயே இன்னமும் இருந்து வருகின்றது. அய்யோ மூடமக்களே நீங்கள் மக்கள் ஆவதெக்காலம்!

## மேலூரில் ஒரு ஹைஸ்கூலுக்கு வேண்டுகோள்

மதுரை ஜில்லா மேலூரில் ஒரு உயர்தர எலிமெண்டரி பாடசாலை அமெரிகன் பிராட்டெஸ்டெண்ட் மிஷனால் நடத்தப்பட்டு வருகிறது தற்பொழுது தாழ்ந்த வகுப்பினர் நடுத்தர வகுப்பினரின் நன்மையைப் பெரிதும் நாடியே சர்க்காரும் எலிமெண்டரி பாடசாலைகளை பெருக்கி வரநோக்கம் கொண்டிருக்கிறார்கள்.

ஹைஸ்கூல் படிப்பு அதிக செலவுள்ளதால் தாலூகா போர்டார் எலிமெண்டரி பாடசாலைகளை மட்டும் ஏற்படுத்தி நடத்தலாமேயன்றி ஹைஸ்கூல் விஷயமாகத் தலையிட அதிகாரமில்லை ஆதலால் இத் தாலூக்காவிலுள்ள ஜனங்கள் ஹைஸ்கூலுக்குவேண்டிய நிதியைத் தயார் செய்து நடத்திக்காட்டினால் மற்ற இடங்களில் நடந்ததைப்போல ஜில்லா போர்டாரும் உதவி செய்ய முன் வரக்கூடும் ஆகவே இந்த ஜில்லாவின், இதர தாலூக்காக்களை பின்பற்றி மேலூர் தாலூக்காவில் உள்ள பெரிய மனிதர்களும், பணக்காரர்களும், தாலூக்கா போர்டு மெம்பர்களும் போதுமான பணம் சேகரித்து இங்கு ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தினால் இத்தாலூக்காவிற்கே பெருத்த நன்மை உண்டாகும் —— மேலூர்வாசி

## சிற்றுண்டி விருந்து

உசிலம்பட்டி தாலூகா போர்டுக்கு கல்லுப்பட்டி பிர்க்கா மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஜஸ்டிஸ் கட்சி திரு மிகு முத்துசாமி நாயுடு அவர்களுக்கு 2-9-28 ஞாயிற்றுக்கிழமையன்று ஷை பிர்க்கா வாசிகளாலும் குண்ணத்தூர் ரெங்கபாளையம் பெருமாள்பட்டி கோபாலபுரம் முதலிய கிரும வாசிகளாலும் ஒரு சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது. அவ்விருந்திற்கு சுமார் 200 பேர்கள் வரை வந்திருந்தனர்.

விருந்து 3 மணிக்கு துவக்கி உபந்நியாசங்களோடு சுமார் 6. மணிக்கு முடிந்தது பின்னர் இரவு 8 மணிக்கு சங்கீதக் கச்சேரி ஸ்ரீமான்சூரிய நாராயண பாகவதர் தலைமையில் நடைபெற்றது இரவு 12 மணிக்கு சங்கீதக் கச்சேரி முடிவு பெற்றது மு சு சங்கரலிங்கம் செட்டியார்,

---

## பட்டிவீரன் பட்டி நாடார் மகாஜனசங்கம்.

### அறிக்கை

நமது நாடார் மஹாஜன சங்கம் மதுரையிலிருந்து பட்டி வீரன்பட்டிக்குக் கொண்டு வரப்பட்டு சங்கத்தின் வேலைகள் முற்றிலும் தீவிர முயற்சியுடன் நடைபெற்று வருகிற தென்பது யாவரும் அறிந்ததே சங்கத்தின் நன்னோக்கங்கள் சங்க வருவாயாகிய சந்தா, நன்கொடை, தலைக்கட்டு வரி முதலியவைகளிலிருந்து நடை பெற வேண்டியிருப்பதால் சந்தா பாக்கி வைத்திருக்கும் அபிமானிகளெல்லோரும் சந்தா பாக்கிகளை தவறாது செலுத்தி சங்கத்தை ஆதரிப்பதுடன் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துக் கொடுத்து சங்கத்தை மேன் மேலும் முன்னுக்கு கொண்டு வரும் படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.


காரியதரிசிகள்,
டப்ளியூ, பி, ஏ, சௌந்திர பாண்டிய நாடார்,
கே, எஸ், என், பெரியதம்பி நாடார்,
(10—9—28) வத்தலக்குண்டு போஸ்டு,

## புரோகிதம் ஒழிந்த திதி

### சாத்தனூர்,

திருவண்ணமலை தாலூக்கா சாத்தனூர் கிராமம் திரு வா, ராமசாமிநாயுடு குமாரன், திரு சேஷாசலநாயுடு என்பவர் தன் தகப்பனாரின் திதியன்று பிராமணீயத்தை ஒழித்து சுற்றத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளித்து அலுவலை முடித்தனர் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்,


உலகப்பிரசித்தியும் அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும்பெற்ற டாக்டர் எஸ். பி. மருந்துகள்.




12 GOLD MEDAL TO Dr. S. PALANIYAPPA MUDALI.

# அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றாடம் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஒளஷதம். விபரப் கேட்லாக் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

# தங்கரேக் குளிகை.

## தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

**தண்டபாணி வைத்தியசாலை,**
29½, சைனபஜார், மதராஸ்,

# காலரா.

கொடியதும், மிகப் பயங்கரமானதுமான இந்த நோய் உங்கள் ஜில்லாவிலாவது, தாலூக்காவிலாவது, கிராமத்திலாவது பரவுமுன்—நீங்கள் முன் ஜாக்கிரதையாயிருங்கள்! காலராவைத் தடுப்பதற்காயினும் சரி, அல்லது குணப்படுத்துவதற்காயினும் சரி, வைத்ய ரத்ன கோபாலாச்சார்லு அவர்களின்

## கற்பூராதிரிஷ்டம்
## &
## விஷூசிசஞ்சீவினிவடி

என்ற மருந்துகளுக்கு இணையானது ஒன்றுமில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியதவசியம்.

**விலை செட் 1-க்கு ரூ. 1-2-0.**

# ஆயுர்வேதாஸ்ரமம்,

**151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி,**
**தபால் பெட்டி 287, சென்னை.**

## பண்டைத் தமிழ்த் திருமணமும் நன்கொடையும்

2-9-28-ல் திருநெல்வேலி மேற்கு புதுத்தெரு திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் தமையனார் திரு. அ. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் புதல்வி திருவளர்செல்வி முத்துமீனாக்ஷியம்மைக்கும், நாகர்கோவில் திரு. அ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தமையனார் குமாரரும், போலீஸ் டிப்டி சூப்ரெண்ட் ராவுசாகிப் திரு கற்பகநாடகம் பிள்ளையவர்கள் பௌத்திரருமான திருவளர்செல்வன் ஆனந்தராமா அவர்களுக்கும் பண்டைத் தமிழரின் வழக்கப் பிரகாரம் தமிழ் மொழியிலேயே ஸ்ரீலஸ்ரீ மரகதசுந்தர குருக்களவர்களைக்கொண்டு திருமணம் சிறப்பாக நடத்தப்பெற்றது. மேற்படி இயக்க முன்னேற்றத்திற்காக உழைத்துவரும் "திராவிடன்" "குடி அரசு" பத்திரிகை யொவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ரூபாய் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. ம. சு. ஆ. சுப்ரமணியஞ் செட்டியார்.

## விதவைப் பெண்கள் தேவை

மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூகாவைச் சேர்ந்த சலுப்பபிள்ளையார்தத்தம் கிராமமுன்சீப் முத்தைய ரெட்டியாரும் டைஜில்லா டைதாலூகா வெள்ளாகுளம் கிராமம் உள்கடை மேலப்பட்டியிலிருக்கும் சுப்பா ரெட்டியார் மகன் நாராயணசாமி ரெட்டியாரும் ஆகிய நாங்கள் ரெட்டி குலத்தில் சிறுவயதில் விதவையான பெண்கள் இருக்க அந்தஸ்துள்ளவர்களாயிருந்தால் விவாகம் செய்து கொள்ள சம்மதிக்கிறோம்.


# நீங்கள் கேட்டிராத ஆச்சரியம்!

# ஆனந்த விகடன்

**பல சித்திரப் படங்களுடன் 64 பக்கங்கொண்ட நூதன மாதப் பத்திரிகை.**
**இப்பத்திரிகை சென்ற மாசிமாத முதல் 'வாசன் புஸ்தகசாலையாரால் நடத்தப்படு'வது உலகமறிந்தது.**

## ஆனந்த விகடன் நிலைமை வருமாறு.

பிரபவ ஹு மாசி மீ வெளியீடு-700 காபிகள் பங்குனி மீ 1000 காபிகள்.
விவப ஹு சித்திரை மீ வெளியீடு 1500 காபிகள் வைகாசி மீ வெளியீடு 2000 காபிகள் ஆனி மீ வெளியீடு 3000 காபிகள்
" ஆவணி " 5000 " ஆவணி " 8000 " வைகாசி " 8000 "

தற்போது ஆனந்தவிகடன் 8000 காபிகள் செலவாகிறது. "ஆனந்த விகடனின்" ஓயாத வேலையும் சலிப்பில்லாத உழைப்பும் இத்தகைய மகா ஜனங்களின் ஆதரவுக்குக் காரணம்.

நீங்கள் சந்தாதாரரல்லாதவராயின் உடனே முன்பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் ஆனந்த விகடனுக்குச் சந்தாதாரராயின் உடனே உம்முடைய சிநேகிதர்களையும் சந்தாதாரராகச் சேர ஏற்பாடு செய்யுங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு வருஷசந்தா தபால் கூலியுள்பட ரூ. 1-0-0. அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1-4-0.

## மாதிரி காபி இனாம்.

**ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.**

தந்தி விலாசம் 'விகடன்' டெலிபோன் 3311,



ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க பதக்கங்களும் பரிசுபெற்று வருவது.

## குருநாத சஞ்சீவி எண்ணெ.

**7-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூபாய் 3-0-0 தபால் சார்ஜ் வேறு.**

இந்த எண்ணெ முக்கியமாய் மூலவியாதி உள்ளவர்கள் சாப்பிட்டால் பூர்ணசுகமடையலாம். தீரும் வியாதிகள் :— மூலச்சூடு, வெட்டைச்சூடு, வெள்ளை, பவுத்திரம், மேக காங்கை, இரேக எரிச்சல், மலசிக்கல், வாய்ப்புண், நீர் எரிச்சல், முதலிய சகலவியாதிகளையும் உடனே கண்டிப்பதோடு, இரேகத்துக்கு குளிர்ச்சியை கொடுக்கும். பத்தியம் இல்லை.

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஆராத புண்களை 3 வேளையில் குணத்தைக் காட்டக்கூடிய,

## சித்த சர்வ ரணக் களிம்பு.

**டப்பி விலை ரூபாய் 1-0-0 வி, பி. வேறு.**

இந்தக் களிம்பை புண் இருக்கும் இடத்தில் காலை, மாலை இருவேளையும் தடவிக்கொண்டு வந்தால் 5-நாளையில் எவ்விதமான புண்களும் ஆறிவிடும் என்பது கை கண்டபலன்.

விலாசம் :— ராஜவைத்திய ஆஸ்ரமம்,
செவ்வாய்பேட்டை, சேலம்.



## அனிதா காவ்பார்ட் வைத்தியசாலை.

ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா
வோகளி ஆரியா
எம் ஏ, பி டி, எம் டி,
சர்ஜன் அண்ட் பிஸிஷன்.

கர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளையும் நிவர்த்திப்பதிலும், மருத்துவம் செய்வதிலும் கை தேர்ந்தவர்.

குழந்தைகளின் வியாதிகளுக்கு சிறந்த வைத்தியம் செய்யப்படும்.


டாக்டரை பார்க்கும் நேரம்;—
காலை 8 முதல் 11 மணி வரை
மாலை 5 முதல் 6 மணி வரை
டெலிபோன் நெ. 3789.
158, புரசைவாக்கம் ஹைரோட்,
வெப்பேரி, சென்னை.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க் பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன?
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையாண கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானல் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினல் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனு, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அபிப்பிராயங்கள் செய்கின்றனர்? சிசுக்கொலை அபிப்பிராயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானல் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினல் உள்நாட்டுக்கு தபால் செலவு இனம்.

## வாஸன் புஸ்தகசாலை,

24½, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119, ஜி. டி. மதறாஸ்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜலந்திரா சூரனைப் பரமசிவன் ஜெயிக்கமுடியாமல் அவனது பெண் சாதியின் கற்பைக்கெடுக்கப்பார்வதியை மகாவிஷ்ணுவினிடமனுப்ப அதற்கிணங்கிய மகாவிஷ்ணு அவன் பெண்சாதியான பிருந்தையின் கற்பை அழித்தார். அவளும் விஷ்ணுவைக்கடுமையாகச் சபித்தாள் என்னும் கதை ஆனந்த ராமாயணத்திலும், கந்தபுராணத்திலும் காணப்படுகிறது.

திரிபுரஅசுரர்கள் நல்வழியில்நடந்து எல்லையற்ற புண்ணியத்தைச் செய்து விட்டபடியால் பரமசிவன் நாரதரை அவர்கள் பெண்ஜாதிகளிடமனுப்பி அவர்கள் கற்பைக் கெடுக்க மார்க்கத்தைச் செய்தார் என்னும் கதை வாயு புராணத்தில் காணப்படுகிறது.

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் புத்த அவதாரம் ஒன்றென்றும், ஜெயின மத ஸ்தாபகரான ரிஷப தேவரை விஷ்ணுவின் அம்சாவதாரமென்றும் ஒருகாலத்தில் ஒப்புக் கொண்டு பிற்காலத்தில் மதத்வேஷத்தால் அவர்கள் மோசடியான மதத்தை உபதேசம் செய்யவந்தவர்களென்று மத ஆச்சாரிகள் புராணங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். பிரம சூத்திரத்திற்குப் பாஷியம் செய்த சங்கரர், ராமாநுஜாச்சாரியார், மத்வாச்சாரியார், நீலகண்டசிவாச்சாரியார், இவர்கள் ஜைன பௌத்த மதங்களைத் தங்கள் பாஷியங்களில் கண்டித்திருக்கிறார்கள். இவர்களும் விஷ்ணுவினுடையவும் சிவனுடையவும் அவதாரங்களாம். ஜைன பௌத்த மதங்களுடைய ஆதி புருஷர்களும் மகாவிஷ்ணுவினுடைய அவதாரங்கள் என்றும் இவர்களும், வியாசர், பிருகு, ராமர், கபிலர், பதஞ்சலி, முதலியவர்களைப்போல் சத்தியஸ்வரூபிகள்என்றும் ஒத்துக்கொள்கையில் எந்த உபதேசங்கள் சரி? ஆதி மதங்கள் சத்தமாக இருந்தன, பிறகு சீரழிந்தன வென்றால் அதேகதியாகத்தான் நம் இதிகாச புராணங்களும் ஏன் வந்திருக்கக்கூடாது? தற்காலத்தில் அவைகளும் ஜன சமூகங்களை சீரழிக்கவந்தபேயென்று 'குடி அரசு' சொல்வதில் குற்றமென்ன?

சங்கருடைய அவதாரமென்று சொல்லப்படும் சங்கராச்சாரியின் சங்கரபாஷியம் விஷ்ணுவின் அவதாரமாகிய கபில பகவான் உபதேசித்த ஸாங்கிய மதத்தைக் கண்டிக்கிறதே. அதனால் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மதவிஷயமான அபிப்பிராய பேதமுண்டா? விஷ்ணுவின் அம்சமான வியாசரோ விஷ்ணுவின் அம்சமான கபிலர் உபதேசித்த சாங்கியத்தைக் கண்டித்தால் கிருஷ்ணன் கீதையில் ஸாங்கிய யோகமே ஞானயோகமென்றும், அதே கர்மயோகமென்றும், அவ்விரண்டில் ஒன்றைக் கைப்பற்றினவன் இரண்டின் பயனை அடைகிறான் என்றும்சொல்லியிருப்பதற்குப் பதிலென்ன? ஆதிசேஷ அவதாரமான பதஞ்சலியால் உபதேசிக்கப்பட்ட யோகசாஸ்திரத்தைச் சங்கர பாஷ்யம் கண்டிக்கிறது. தன் பக்தர்களில் சிரேஷ்டராய் விளங்கி அவருக்கு ஆனந்த நடனம் செய்த பரமசிவன் அவருக்குப் பொய்யான மதத்தை உபதேசித்திருப்பாரா? இதில் எது சரி எது தப்பு? வியாசருடைய முக்கியசிஷ்யரான ஜைமினி மகரிஷி உபதேசித்த மீமாம்ஸா சாஸ்திரத்தை வியாசர் ஏன் கண்டிக்கிறார்? இவர் தன் சிஷியனுக்கு உண்மையைச் சொல்லிக்கொடுக்கவில்லையா? இத்தனை விஷயங்களையும் இன்னும் அநேக விஷயங்களையும் படித்தும் கவனித்தும் பார்க்கையில் வித்வ சாமர்த்தியத்தால் பலவித வியாக்யானங்கள் செய்து அதாவது வெள்ளைக்கார ராஜ்யங்களில் பொருளுக்காக பலவிதமான சாமான்களைப் பலமாதிரியாய் புதிது புதிதாய் வேடிக்கையும், சௌகரியமும், பிரபையும் அமைந்தவைகளாகச் செய்து விற்றுக் காலக்ஷேபம் செய்யும் வித்தை போலும், வக்கீல்கள் என்ற ஒருகூட்டம் தோன்றி உலகமறிய மனதாரவே மெய்யைப் பொய்யென்றும், பொய்யை மெய்யென்றும் சமயத்திற்குத் தக்கபடி பேசி வயிறு வளர்ப்பது போலவும் நம் மதத்தையும் சுயநலக்காரர்கள் சின்னபின்னப்படுத்திப் பொது அறிவைக் கெடுத்துவிட்டார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ இவையனைத்தும் ஒழிந்தால்தான் ஜனசமூகம் பொது அறிவைப்பெறமுடியுமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

இராமாயணம் அயோத்தியா காண்டத்தில் பௌத்தனும் நாஸ்திகனும் ஒன்றே என்று ராமர் கண்டித்திருக்கிறார். "பௌத்த மதத்திற்கு பின்னே ராமாயணக் கதை?" என்னும் ஒரு கேள்வியே ராமாயணக் கதையின் பெருமைக்குப் போதுமானதாகவிருக்கும். ஆழ்வார்களும், நால்வர்களும் தங்களுடைய பாசுரங்களில் சமணரென்றும், சாக்கியரென்றும் ஜைன பௌத்த மதங்களைக் கண்டித்திருக்கிறார்கள். இவர்களில் எல்லோரும் இந்த மதங்கள் உற்பத்தியானதற்குப் பின் பிறந்தவர்களா? அதற்குமுன் இவர்கள் எங்கேயிருந்ததில்லையா? கலியுகத்தின் ஆரம்பத்தில்பிறந்த நம்மாழ்வாரும் அதற்கு முந்தின யுகங்களில் பிறந்த சில ஆழ்வார்களும் ஜைன பௌத்த மதங்களை அறிந்தும் கண்டுமிருக்க முடியுமா? இதற்கெல்லாம் சமாதானம் நீங்களே ஆலோசியுங்கள். இதைப்பற்றின விஷயம் இன்னும் அநேகம் எழுதவேண்டியிருக்கிறது. "குடி அரசில்" இதற்குமேல் எனக்கு இடமில்லை. சமண மதத்தின் முக்கிய புருஷர்களுடையவும் அவர்களில் முதலாவதான ரிஷபதேவருடையவும் பெருமைகளைப் பின்னால் எழுதுகிறேன்.

---




நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேசிய ஔஷதங்களென முதல்தர தங்க மெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.
பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.
நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை
அடைய வேண்டுமானால்

பழனி சி. எம். சாமி மகா வீரிய

# தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

தாதுபுஷ்டியில் இதற்கு நிகரானது ஒன்றுமேயில்லை. தீது துர்க் கிருத்தியங்களால் இழந்த ஆண்மைத் தனத்தை வெகு சீக்கிரத்தில் மீட்டு தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், நபுஞ்சகம் முதலிய வியாதிகளை நீக்கி சந்தான விர்த்தியை உண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

48 நாள் பஸ்பம் ரூ 20   24 நாள் பஸ்பம் ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக் குறைவு முதலிய நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுதமுடியாது. இன்னும் மேற்படி தங்க பஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேகபுஷ்டியையும் தரும் சகல மேகமும் ஐயரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது தங்களுடைய குரு அப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று. இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்த் தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குரு அப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பக் கோருகிறேன். கா. முகமது அப்துல்காதர், காரைக்கால். 21-12-26

## குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16.

நற்சாட்சி:—தங்கள் குருதாளக பஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி, இளைப்பு இவைகள் குணமாயிருக்கின்றது. ஆர். கந்தையா, நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ, சிலோன். 18-9-25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்


C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.


அறிவு என்றைக்கு அடிமைப்பட்டதோ,
அன்றே உடலும் அடிமைப் பட்டுவிட்டது.

---

கவனியுங்கள் ! நல்ல லாபம் !

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே ! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூருகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப் படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

## சேலம் ஜவுளிகள்.

வேஷ்டிகள்.
அசல் 80-ம் நெ. நூல் வேஷ்டிகள். பல வர்ணங்களில் நேர்த்தியான பார்டர் போட்டது கால் அங்குல அரை அங்குல பட்டுக்கரைகளில் அசல் வெள்ளி ஜரிகையினால் கொடி, இலை, பூ, காய்கள் சித்திரிக்கப்பட்டு உடுத்திக்கொள்ளுவதற்கு நாகரீகமாயிருக்கும். நீடித்து தாங்கக்கூடியது. 50 அங்குல அகலத்தில்எந்த நீளத்திலும் முழம் 1-க்கு ரூ. 1-12-0, 2-0-0, 2-8-0, 3-0-0.

நேரே உற்பத்தி செய்யுமிடம் இது ஒன்றே. புதுமாதிரி தினுசுகள் மிகவும் குறைந்தவிலைக்கு உத்திரவாதத்துடன் உங்கள் வீட்டுக்கே சேர்ப்பிக்கிறோம். தபால் செலவு இனம். உடனே எழுதுங்கள்.

சேலைகள்.
நேர்த்தியான ஜரிகைபார்டர் போட்ட பல வர்ண அசல் 60 நெ. நூல் சேலைகள். தினந்தோறும் உடுத்துக் கட்டலாம் சாயத்திற்கு உத்திரவாதம். கனம் இல்லாத நூல் புடவை இதுஒன்றுதான். 42 அங்குல அகலம் 7 கஜ நீளம் விலை ரூ 14—0—0.

சேலம் ஷண்முகம் கம்பெனி லிமிடெட்,
மெயின் ரோட், சேலம். (தெ இந்தியா.)

## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.

இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி.
புதுச்சேரி

## முந்துங்கள் !

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷெர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த பரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி. 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் ஸிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1. ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 2? ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி

தபால் பெட்டி 119, மதராஸ்.

## அறிவிப்பு.

“குடி அரசு” வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

‘ரிவோல்ட்’ ‘ரிவோல்ட்’

## ‘REVOLT’

—)o(—

“குடிஅரசி”ன் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஆசிரியர்.- “குடி அரசு” & “ரிவோல்ட்,”

ஈரோடு.

# ஹிப்னடிசம், மெஸ்மெரிஸம்.

முதலிய அரிய அற்புதங்களைக் கற்கவேண்டுமானல்,
சுயமரியாதை பெற வேண்டுமானல்,

# ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

என்னும் மனோ வசிய ஜீவ வசிய நூலைப் படித்து
பயனடையுங்கள்.




## இதிலடங்கிய விஷயங்கள் :—

I முதற் பாகம் :—(II பாடங்கள்)

முன்னுரை.

1 மானிட வசியம்
2 தன்னம்பிக்கைப் பற்றி
3 தன்னாட்சி
4 இருவகை மனம்
5 சுய மந்திரம்
6 மஹா ரகசியம்
7 பிராணயாமம் (படங்களுடன்.)
8 வியாகூலமும், வீண்கிலியும்
9 அயர்ந்த நித்திரை
10 மன போர்மை
11 முக்கிய குறிப்பு

II இரண்டாம் பாகம் :—(7-பாடங்கள்.)

1 டெலிபதி or மானஸ தந்தி
2 மானஸ தந்தியின் முதல் அப்பியாசம்
3 மானஸ தந்தியின் இரண்டாவது அப்பியாசம்
4 மானஸ தந்தியின் மூன்றாவது அப்பியாசம்
5 மானஸ தந்தியின் நான்காவது அப்பியாசம்
6 மானஸ தந்தியின் ஐந்தாவது அப்பியாசம்
7 பொதுக் குறிப்பு

III மூன்றாம் பாகம் :—(12-பாடங்கள்.)

1 கோரிய பெண்ணை மண முடிப்பது
2 மணமகன், மணமகளுடைய காதல் விருத்தி
3 ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல்
4 ஸ்திரீ புருஷனுடைய கவலை ஒழித்தல்
5 நண்பரின் இழந்த நேசத்தைப் பெறுதல்
6 பகைமற்ற ஒழுக்கத்தைப் பக்குவப் படுத்தல்
7 கல்யாணத்திற்கு ஏற்பாடான மணப்பெண்ணின் காதலைப் பெற
8 மனமில்லா மணத்தை மகிழ்வு பெறச் செய்தல்
9 உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல்
10 மேலதிகாரியின் விருப்பத்தைப் பெறுதல்
11 உலகத்தில் முதன்மைபெற
12 நட்பை உறுதிப்படுத்தல்

அனுபந்தம்—1

மானிட வசிய ரஹஸ்யம்.

மானிட வசிய ரஹஸ்யத்தின் பீடிகை

மானிட வசியம், தன்னடக்கம் வியாதிகளை விலக்கிக் கொள்ளல் அப்பியாசம், மந்திரம்

அனுபந்தம்—2

அற்புதானந்த ரஹஸ்யம்

அல்லது

சில அபூர்வ மர்மங்கள்

பிராணயாமத்தால் வசீகர வசியம் பெறுவ தெப்படி?

இரகசிய முறையால் எளிதில் அரிய பொருள் சம்பாதிப்ப தெப்படி?

ஒரு சாதாரண யோக சாதனையால் எல்லா விருப்பங்களையும் பெற்றுக்கொள்வ தெப்படி?

எப்படிப்பட்டவர் கூட்டத்திலும் இணையில்லாக் கண்ணியம் பெறுவ தெப்படி?

நட்சத்திர உதவியால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெற்று எல்லாவித இடையூறுகளையும் தாண்டிக்கொண்டு அப்பால் சென்று அளவிறந்த வெற்றி பெறுவதெப்படி?

முதிர்ந்த வயதிலும் வாலிபத்தன்மையை வளர்ப்ப தெப்படி?

கண் பார்வையையும், கறு ரோமத்தையும், வெண் தந்தங்களையும் காப்பாற்றிக் கொள்வ தெப்படி?

பிராணயாமம் முதலியவற்றால் பூரணச் சுகத்தை நிலைப்படுத்திக் கொள்வ தெப்படி?

இருவிர ஆன்மப் பயற்சியால் எல்லா நோய்களையும் கண்டிப்ப தெப்படி?

பிளேக், விஷ ஜுரம் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்வ தெப்படி?

வைசூரியும், வாந்தி பேதியும் வாராமல் தடுப்ப தெப்படி?

மரணம் வருமுன் அதை அறிந்து கொள்வ தெப்படி?

மரணத் தறுவாயில் செய்யப்படும் ஒருவகைக் கிரியையால் மரணத்துக்குப் பின் மகா மேலான உன்னத ஸ்தானத்தைத் பெறுவ தெப்படி?

சாதாரணப் பிராணயாமத்தால் உங்களுடைய பகைவரை நண்பராகச் செய்து கொள்வ தெப்படி?

மனோ சக்தியை அபிவிருத்தி செய்து கொள்வ தெப்படி?

ஜியூஜிட்ஸு முறைப்படி மரித்தோரை எழுப்புவ தெப்படி?

நாகப் பாம்பின் விஷத்தைப் போக்குவ தெப்படி?

வில்வ வேரின் விநோதங்க ளென்ன?

புளி யேப்பத்தைத் தடுப்ப தெப்படி?

துளசியின் மகிமை என்ன?

காயத்ரியின் அதிசயம் யாது?

லங்கனத்தின் மகிமை என்ன?

இத்துடன் பல விநோத விஷயங்களைப் படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

மேல் நாட்டில் 12 பவுன் (ரூ. 80) விலை மதிப்பிடக் கூடிய இப் புத்தகத்தை ஏழை நாடாகிய இத்தமிழ் நாட்டின் கனவிலை ரூ. 3-க்கே விற்க துணிகின்றோம்.

புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மூன்று ரூபாய் மதிப்பிடுவார்கள். என்பது நிச்சயம்.

உடனே உங்களுக்கோர் ஐசுவரியம் போன்ற இப்புத்தகத்தை வரவழையுங்கள்.

இதன் விலை ரூ. 3—0—0, தான் வி.பி. வேறு.

எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும்

ஒரே முறையில் 2 பிரதி வாங்குவோர்க்கு தபால் சார்ஜ் இனம்

**மனோஹர் கம்பெனி, தபால்பெட்டி 248, சென்னை.**

ஸ்ரீமத் நாயக்கர் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பத்திரிகையில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.